# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மே 2001 ஜீவியம் 7 மலர் 1

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம்* IV | **2** |
| *இம்மாதச் செய்தி* | **7** |
| *லைப் டிவைன்* | **8** |
| *சிறு குறிப்புகள்* | **12** |
| *சாவித்ரி* | **14** |
| *அன்பர் கடிதம்* | **16** |
| *பகவானுடைய இதர நூல்கள்* | **19** |
| *கன்சல்டன்சி* | **21** |
| *பழக்கம் பழைய நிலையை நீடிக்கும் மலர்ச்சி அன்னையை நிலைநிறுத்தும்* | **23** |
| *அஜெண்டா* | **34** |
| *லைப் டிவைன் - கருத்து* | **36** |
| *மாமனாக வந்தவர்* | **38** |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | **50** |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**644) " இறைவன் திருவுள்ளம் நிறைவேறட்டும், என் விருப்பம் வேண்டாம்", என்பது மேல் மனத்திலிருந்து ஆழத்திற்குப் போக உதவும் சக்தி வாய்ந்த மந்திரம். நமக்கு ஒரு பிரார்த்தனை நிறைவேற வேண்டும் என்றால், அதைத் தவிர்த்து, இதை மேற்கொண்டால், இம்மந்திரம் சக்தி வாய்ந்ததாக அமையும்.**

***திருவுள்ளம் திருப்தியானால், பிரச்சினை தீரும்.***

நமது விருப்பம் என்பதும், இறைவனின் திருவுள்ளம் என்பதும், அளவுகடந்து மாறியவை. வீடு கட்ட நினைப்பவன் மனதில் தனக்கு ஒரு வீடு கட்டிக் கொள்ளும் விருப்பம் மட்டுமே இருக்கும். இறைவன் திருவுள்ளம் என்பதில் விருப்பம் இல்லை, தான் என்பதில்லை. அகந்தை இல்லை. அளவு என்பதில்லை. நாம் கேட்கும் மனநிலையைப் பொறுத்து, இறைவன் அவ்விருப்பத்தை நம் சௌகரியத்தின் மூலம் நிறைவேற்றினால் நமக்கு வீடு கிடைக்கிறது. நாமுள்ள கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி மூலம் நிறைவேற்றினால், அதன் உறுப்பினர் அனைவருக்கும் வீடுண்டு. நம் மனம், நம்மை விலக்கி, இருளிலிருந்து அகன்று ஜோதியிலிருந்து கேட்டால், வீடு கிடைக்கும். அனைவருக்கும் மனதில் இருளற்று ஜோதி நிரம்பும். ஜோதியான நானோ, விரும்பும் நானோ வேண்டியதில்லை, என் விருப்பம் வேண்டியதில்லை, இறைவன் திருவுள்ளம் நிறைவேறட்டும் என்றால், இறைவன் அந்தவுள்ளம் மூலம் செயல்படும்பொழுது, நம் மனதிலுள்ள அதிகபட்ச இலட்சியத்தை இறைவனால் பூர்த்தி செய்ய முடியும். இந்த நாட்டில் எவரும் வீடில்லாமலிருக்கக் கூடாது என நான் ஆழ்ந்து விருப்பப்பட்டிருந்தால், என் விருப்பம் வேண்டாம் என்ற பொழுது எனது மேலெழுந்த விருப்பம் - வீடு கட்ட வேண்டும் - விலகுகிறது. இறைவன் திருவுள்ளம் நேரடியாகச் செயல்படாமல், என் மனதில் ஆழத்திலுள்ள விருப்பம் - நாட்டில் அனைவரும் வீடு பெற வேண்டும் - இறைவன் திருவுள்ளமாகப் பூர்த்தியாகிறது. அந்த ஆழ்ந்த விருப்பமும் இல்லாமலிருக்க, விருப்பமே இல்லாமலிருக்க வேண்டும். அது மனிதனுக்கு மட்டுமன்று, தவசிக்கும் சிரமம். என் விருப்பம் வேண்டும் என்றால் என் சிறிய விருப்பம் வேண்டும் என்று முடிகிறது.

நாம் மோட்சத்தை நாடலாம், செல்வத்தை நாடலாம், உலகம் உய்ய வேண்டும் எனலாம். இவை மேல் மனத்தின் எண்ணமாக இருப்பதால், நாம் நாடுவதால் நடக்கப் போவதில்லை. இவற்றிற்கு சக்தியில்லை. தடையாகச் செயல்படுவதே இவற்றின் கடமை. இவற்றை விலக்க என் விருப்பம் வேண்டாம் என்கிறோம். இறைவனால் உள்மனத்தில் **(inner mind)** நாம் தயார் செய்யப்பட்டிருக்கிறோம். நாம் தயாராகியிருந்தாலும், இறைவன் நம்மைத் தயார் செய்திருப்பதால் - ஊரில் அனைவருக்கும் வீடு கட்ட, உலகில் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க - அதுவே இறைவன் திருவுள்ளம். நம் உள்மனத்தில் **(inner mind),** ஆழ்மனத்தில் **(subconscious)** உள்ள நம் எண்ணம், இறைவனின் திருவுள்ளமாகிறது. **நம்மைப் பொறுத்தவரை நம் ஆழ்ந்த பகுதிகளே நமக்கு இறைவனாகும்.**

மேற்சொன்னவை சாதாரண மனிதனுக்குரியவை. யோகியின் நிலை என்ன? யோகியும் ஆரம்பகாலத்தில் சாதாரணமாக ஆரம்பிக்க வேண்டும். பெரும்பாலும் அந்நிலையோடு யோகம் முடிந்துவிடும். எளிய நிலைகளை யோகி கடந்தால், 'என் விருப்பம்', திருவுள்ளம் என்பவை எப்படியிருக்கும்? எளிய நிலைகள் **occupation, pre-occupation** மனத்தை நிரப்பிக் கொண்டுள்ளவை, பேயாகப் பிடித்துக் கொண்டிருப்பவையாகும். என் மனதில் எதுவும் இல்லை என்றால், என் மனதிலுள்ளதை நான் அறியேன் என்று பொருள். அறையில் காற்றேயில்லை எனில் காற்றில்லை என்று பொருளில்லை, காற்று வீசவில்லை என்று பொருள். காற்றில்லாமல் அறையிருக்க

முடியாததுபோல், மனத்தில் எண்ணமற்று மனமிருக்க முடியாது. எண்ணம் உயர்ந்திருக்கலாம், எண்ணமில்லாமலிருக்க நம்மால் முடியாது. எண்ணமற்ற மனம் முனிவருடைய மௌனம் நிறைந்த மனம். நம் போன்றவர்க்கு அது இல்லை. நம் மனம் எக்காலத்திலும் எண்ணங்களால் நிறைந்திருக்கும். உள்ளபடி என் விருப்பம் வேண்டாம் என்றால் மேல் மனத்தின் விருப்பம் விலகி, உள்மனத்திற்கு நம்மை இம்மந்திரம் கொண்டு செல்லும். உள்மனத்திற்கு போவது பெரிய நிலை. தவத்தை மேற்கொண்டவர்க்கு 1) ஆசை அழிதல் 2) மௌனம் பலிப்பது 3) அசைவு அழிவது 4) நிதானம் வருவது 5) பக்குவம் பெறுவது 6) புலன் அடங்குதல் 7) புலன் அவிழ்தல் 8) புலன் செயலின்றி பார்க்க, கேட்க முடிவது 9) வார்த்தை பலிப்பது 10) உள்மனத்தை அடைவது போன்றவை பெரிய கட்டங்கள். முதற் கட்டங்களே ஆனாலும் பெரிய முதற் கட்டங்களாகும்.

**Let Thy will be done, not my will** என்பதை உருக்கமாகச் சொல்லிக் கொண்டேயிருந்தால் அகந்தை கரையும் என்கிறார் அன்னை. அதை நிறைவேற்ற ஓர் உபாயமும் சொல்கிறார். (அன்னை முன்பு) இறைவன் முன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதாக ஒவ்வொரு முறை இதைச் சொல்லும்பொழுதும் கற்பனை செய்ய வேண்டும் என்கிறார். தம்மை வழிபடவேண்டும் என்று சொல்வது அன்னையின் பழக்கமன்று. அதனால் இறைவன் முன் என்கிறார். நமக்கு அன்னையே இறைவன் என்பதால் அன்னைமுன் நமஸ்காரம் செய்வதாக நினைப்பது சரி. சூட்சுமமானவர்க்கு, இதை நினைக்கும்பொழுதே அக்கற்பனை மனதிலெழுந்து, உள்ளேயுள்ள வேகம் அடங்கி, அமைதியுறுவதைக் காணலாம். அக்காட்சி தானே எழுவதும் உண்டு. **தானே எழும் காட்சி பக்குவத்திற்குரியது.**

❊ ❊ ❊

**645) ஒருவன் தன் தாழ்ந்த விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் முறை அவன் சாதிப்பதை நிர்ணயிக்கும். உடல் கடைசி நிலையிலுள்ளது. அதன் தேவையைத் திருமணத்தால் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்.**



**அதனால் திருமண வாழ்வின் தரம், ஒருவன் தன் வாழ்வில் சாதிப்பதைக் குறிக்கும்.**

***உன் நிலை உன் திருமணத்தின் நிலை.***

உயர்ந்த இலட்சியங்கள் உச்சியிலும், தாழ்ந்த விருப்பங்கள் அடியிலும் உள்ள அளவுகோல் மனிதனையும் அவன் உணர்வுகளையும் நிர்ணயிக்கும் அளவுகோலாகும், இந்த அளவு கோலில் 10 நிலைகளை ஏற்படுத்தலாம். மனித முயற்சியை, அவன் சாதனையை இவ்வளவுகோலால் நிர்ணயிக்கலாம். மனிதனுடைய உயர்வையும், தாழ்வையும் அவன் செயல்கள் மூலம் அறியலாம். ஒரு வீட்டில் முன் ஹாலே குப்பையாக இருந்தால், பிறகு அவர்கள் சுத்தத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. பாத்ரூம் சுத்தமாகவும், வாடையின்றியும் இருந்தால் அவர்கள் அதிக சுத்தமானவர்கள் என எளிதில் அறியமுடியும்.

பெற்றோர், பிள்ளைகள் ஆகியவரைப் புறக்கணிப்பவர் கடமையிலிருந்து முழுவதும் விலகியவர் எனவும், ஒரு வாரம் தமக்கு வேலை செய்தவருக்கு உடல்நலமில்லை என்றபொழுது வீட்டு நபர் போல் அவரைக் கவனித்தவர் உச்சகட்டப் பொறுப்புள்ளவர் என்றும் நாம் எளிதில் அறிகிறோம்.

மனமும், ஆன்மாவும் உயர்ந்தவை. உடல் நம் ஜீவனின் கடைசி பகுதி, அதனால் மிகவும் தாழ்ந்ததாகும். உடலுக்குப் பசி, தாகம், உறக்கம் தேவை. மனத்தின் அறிவுத் தாகத்தைப் புறக்கணித்தால், மனம் அதை நாடியபடியிருக்கும். உடலின் பசியைப் புறக்கணிக்க முடியாது. புறக்கணித்தால் மனிதனை வெறியனாக்கும். பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும். யுத்த காலத்தில் கப்பல்கள் அங்கங்கு கடலில், உணவின்றி, பெட்ரோலின்றி நின்றுவிட்டபொழுது அவர்கட்கு யுத்த சந்தர்ப்பத்தில் உதவி அனுப்ப முடியவில்லை. கப்பலிலிருந்த மாலுமிகள் பட்டினியால் இறந்தனர். இறப்பதற்கு முன் அவர்கள் ஒருவரையொருவர் சாப்பிட்டிருந்தனர். பசியின் தீவிரம் மனிதனை விலங்குக்கும் கீழாக்கக்கூடியது.

பசி, தாகம், உறக்கம் தவிர்க்க முடியாதன. அதேபோல் உடலுணர்ச்சி. மனிதனை நிலையிழக்கச் செய்யும். காலத்தில் திருமணமானால் மனிதன் நிதானமாகச் செயல்படுகிறான். திருமணமாகாவிட்டால், பூர்த்தியாகாத தேவை அவனை நிலை குலையச் செய்யும். எனவே, அதை எப்படி அவன் பூர்த்தி செய்து கொள்கிறானோ அது அவன் யார் என்பதை அறிவிக்கும். அத்துடன் திருமணம் குடும்பத்தை அளிக்கிறது. குடும்பத்தில் பெற்றோர், தாம் பெற்ற குழந்தைகள் உள்ளனர். தன் வாழ்வு வளம் பெறும் கருவியான குடும்பத்தை, அதன் அடிப்படையான திருமணத்தை எப்படி நடத்துகிறான் என்பது முக்கியம். நுட்பமான இடம் என்பதால் ஆழ்ந்த சுபாவத்தைக் காட்டும்.

திருமணத்தில் முடிந்தவற்றையெல்லாம் கேட்கலாம், எந்தத் துரோகத்தையும் விரும்பிச் செய்யலாம் என்றவர் வாழ்வில் உள்ள அத்தனைச் சந்தர்ப்பங்களும் அவருக்கு உதவாமற் போயின. ஆரம்பக்கட்டத்திலேயே ஓய்வு பெறும்வரை இருக்க வேண்டியதாயிற்று.

ஒரு பெரிய ஆபீசருக்கு நூற்றுக்கணக்கான நண்பர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மிக உயர்ந்த பதவியிலுள்ளார்கள். எவராலும் அவர் எந்தச் சிறு உதவியையும் பெற முடியவில்லை. தாம் திருமணமானவுடன் குடும்பத்தை மறந்து எட்ட வந்ததுபோல், நண்பர் குழாம் இவருக்கு உதவவில்லை.

நினைக்க முடியாத சம்பந்தம் தேடி வந்து, விரும்பி, போற்றி ஏற்றுக்கொண்டதை, கிராக்கி செய்து, மட்டமாக நடந்து கொண்டவருக்கு, வாழ்வில் அளவுகடந்த உயர்வு வந்தபொழுது அதன் பெருமையையோ, சிறப்பையோ அனுபவிக்க முடியாத நிலைக்குத் தாமே தம்மை ஒதுக்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

தொடரும்..

❊ ❊ ❊

**ஜீவிய மணி**

அகண்டமாக தன்னை உணரும் கண்டம் பிரம்மம்.



# இம்மாதச் செய்தி

**'அம்மா, அன்பே உருவான தாயே! உன்னைத் தவிர எதையுமே நினைக்க முடியாத நினைவை உன் அருளாக அளித்த பெருமை உன்னை மட்டுமே சேருமல்லவா?'**

Ananda, Supermind, Mind, Life, Matter, Inconscient - in all these God has left one possibility that can remember Him. At no level has He removed that possibility. If man wants, he can always remember God. It is upto him to remember or forget God.

It is Her Grace that man is able to remember **MOTHER**. It is **HER** special Grace that he is able to remember **HER** constantly. To know that as **HER** Grace, is to grow in **MOTHER**'s likeness.

❊ ❊ ❊

# லைப் டிவைன்

கர்மயோகி

## IX.The Pure Existent

*P. No: 78*
*Para No:12*

**Pure existent is then a fact.**
**It is no mere concept.**
**It is the fundamental reality.**
**But that is not all.**
**There is the movement, energy.**
**It is becoming.**
**It is also a fact, a reality.**
**There is a supreme intuition.**
**It has a corresponding experience.**
**It may correct the realities we saw.**
**But it may not abolish them.**
**Therefore there are two facts.**
**Both are fundamental.**
**Pure existence is one.**
**World existence is another.**
**It is a fact of Being.**
**Again, it is a fact of Becoming.**
**To deny the one or the other is easy.**
**But we must recognise the facts.**
**They are facts of consciousness.**
**We must find out their true relations.**
**It is true and fruitful wisdom.**



## 9. சத் புருஷன்

சத் புருஷன் என்பது உள்ளது.
அது கருத்தால் கற்பிக்கப்பட்ட எண்ணத்தின் வண்ணமன்று.
அது அடிப்படை சத்தியம் - பிரம்மம்.
அது மட்டுமன்று.
சலனம் உண்டு. அது சக்தி.
அதை சிருஷ்டி என்கிறோம்.
அதுவும் உண்மை, அடிப்படை சத்தியம்.
ஆன்மீக அனுபவத்திலும் அது தெரியும்.
அதற்குரிய அனுபவம் உண்டு.
நாம் கண்ட உண்மைகளை அது மாற்ற முடியும்.
ஆனால், அழிக்க முடியாது.
இவ்விரண்டும் உண்மை.
இரண்டும் அடிப்படையானவை.
சத் புருஷன் ஒன்று.
உலகம் என்ற சிருஷ்டி அடுத்தது.
இது ஆத்மாவுக்குள்ள சத்தியம்.
அடுத்தது சிருஷ்டிக்குரிய உண்மை.
ஒன்றையோ, அடுத்ததையோ இல்லை என்பது சுலபம்.
ஆனால் உள்ளதைப் புரிந்து ஏற்பது நல்லது.
இவை ஜீவியத்திற்குரிய உண்மைகள்.
அவற்றிடையே நிலை பெறும் தொடர்பை அறிய வேண்டும்.
அதுவே ஆன்மீக விவேகம்.

**The Absolute is beyond.** **Page No. :78**

**Our minds try to understand the Absolute.** **Para No. : 13**

**We cannot have a direct knowledge.**

**Mind can only get a representation.**

**It is a psychological representation.**

**There are several such.**

**We take them to be the ultimate truth.**

**Stability, Movement, Oneness, Multiplicity are such representations.**

**The truth is entirely different.**

**The Absolute is beyond all these descriptions.**

**It is Absolute because it is beyond them.**

**What is the fact then?**

**The Absolute takes its poise in the One.**

**The One is stable.**

**The same Absolute whirls, whirls round itself.**

**It does so infinitely, inconceivably, securely.**

**It moves in the multitudinous.**

**World existence is a dance.**

**It is the ecstatic dance of Shiva.**

**The dance multiplies the body of God.**

**The body is numberless to the view.**

**The existence at the centre is white.**

**The dance leaves the existence untouched.**

**It is where it was, what it was.**

**It is as before, ever is and ever will be.**

**It has a one and only object.**

**It is the joy of the dancing.** ***contd...***



பிரம்மம் அப்பாலுக்கப்பாற்பட்டது.

மனம் பிரம்மத்தை அறிய முற்படுகிறது.

நேரடியாக மனம் பிரம்மத்தை அறியமுடியாது.

மனம் பிரதிபலிப்பைக் காணமுடியும்.

அது மனத்தின் பிரதிபலிப்பாக இருக்கும்.

அது போன்றவை பல.

நாம் அவற்றை முடிவான உண்மையாக அறிகிறோம்.

சலனம், சலனமற்ற நிலை, ஐக்கியம், பல ஆகியவை அத்தகையன.

உண்மை முற்றிலும் வேறுபட்டது.

பிரம்மம் இத்தனை விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டது.

அவற்றைக் கடந்ததால், அதை பிரம்மம் என்கிறோம்.

எது உண்மை?

பிரம்மம் ஐக்கியத்தில் உறைகிறது.

ஐக்கியம் என்பது ஏகம், நிலையானது.

அதே பிரம்மம் சுழல்கிறது, தன்னைச் சுற்றிச் சுழல்கிறது.

நிலையாக, நினைவைக் கடந்த நிலையில், முடிவில்லாமல் அது சுழல்கிறது.

அது பலவான சிருஷ்டிகளில் சஞ்சாரம் செய்கிறது.

உலகம் என்பது நடனம்.

அது சிவனுடைய ஆனந்த நடனம்.

நடனம் கடவுளுக்கு ஆயிரம் உடல்களைத் தருகிறது.

பார்வைக்ககப்படும் உடல்கள் அனந்தம்.

சத் மையத்தில் வெண்மையாக வீற்றுள்ளது.

நடனம் மையத்தைப் பாதிப்பதில்லை.

அது இருந்த இடத்தில், இருந்தபடியேயிருக்கிறது.

அன்றும், இன்றும், என்றும் ஒன்று போலுள்ளது.

அதன் குறிக்கோள் ஒன்றேயொன்றாகும்.

அது நடனம் தரும் ஆனந்தம்.

... *தொடரும்*

## "தண்ணீர்"

**Economics** பொருளாதாரம் என்பது கிராக்கியான பண்டங்களைப் பற்றியது. ஒரு பொருள் அளவில்லாமல், மண்போல், கிடைத்தால் இந்தப் பாடத்தின் சட்டங்கள் அதற்கு சரி வராது. கண்ணாடியானாலும், தான்யமானாலும் ஓர் அளவோடு கிடைக்கும் பொருளுக்கே இச்சட்டங்கள் பொருந்தும். **Economics is a science of scarcity** என்பது வாக்கு. ஸ்ரீ அரவிந்தம் இதன் உண்மையை முழுவதும் ஏற்றுக் கொண்டாலும், தன்னை அவ்வுண்மைக்குக் கட்டுப்படுத்திக் கொள்வதில்லை. ஸ்ரீ அரவிந்தத்தின் அடிப்படை, மனிதன் தன்னை அகந்தை மையத்திலிருந்து மாற்றிக் கொண்டால்,

**அப்படிப்பட்ட மனிதனுக்கு எந்தப் பொருளும் அபரிமிதம்**

என்பது கொள்கை. மனிதன் மாறலாம், நிலைமை எப்படி மாறும் என்பது கேள்வி. மாறும் வகையை ஒன்றாகவோ, பலவாகவோ கூறலாம். முதன்மையானதை மட்டும் விளக்கமாகக் கருதுவோம்.

**மனிதன் மாறியவுடன் பொருள் அபரிமிதமாகும்படி நிலைமை மாறும்.**

அன்னை நேரடியாகச் சொல்லிய எதையும் பொருட்படுத்திப் பழக்கமில்லாத அன்பர் மில்லுக்குக் கோதுமை கோட்டா (**quota**) மூலமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. கோட்டாவை ரத்து செய்யும்படி சர்க்கார் உத்தரவு. கோதுமை பஞ்சம் என்பதால் சர்க்கார் நடவடிக்கையை அப்படி எடுத்தது. அன்னையின் ஆசீர்வாதம் தேடிப் போனார். எதையும் அதுவரை இவர் நடைமுறைப்படுத்துவதில்லை என்பதால், அன்னைக்குப் பதில் கூற இஷ்டமில்லை. வற்புறுத்தி கேட்டார். 'முடிந்தவரை பார்க்கிறேன்' என்றார் அன்னை. கோட்டாவை ரத்து செய்யும் உத்தரவு ரத்தாயிற்று. அடுத்தாற்போல் கோட்டாவை அதிகப்படுத்தினர். முடிவாக கோட்டா கொடுக்கும் சட்டத்தை ரத்து செய்தனர். கோதுமை உபரியாகி ஏற்றுமதியாயிற்று. மனிதன் மனம் மாறினால் பொருள் அபரிமிதமாகும். அனந்தம் **(infinite)** எனும்படி அபரிமிதமாகும் என்பது அனுபவம்.



உலகத்திற்கே தண்ணீர்ப் பஞ்சம் வருகிறது. இனி **landlord** என்றது போய் **waterlord** வரும் என்று பேசுகின்றனர். இது அபரிமிதமாகுமா? உலகத்திலுள்ள நீரில் 1% தான் பயன்படும் நீராக இருக்கிறது. மீதி பனிக்கட்டியாகவும் உப்பு நீராகவும் உள்ளது. இத்தண்ணீர் ஏரி, குளம், நதி ஆகியவற்றில் உள்ளது. அதாவது மேற்சொன்ன 1% இல் 2% ஆகும். மற்ற 98% பூமிக்கடியிலுள்ளது என பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம் கூறுகிறது.

- ***நாம் பயன்படுத்துவது 2%.***
- ***நம் கண்ணுக்குத் தெரியாதது 98%.***

பூமிக்கடியிலுள்ள நீர் சுமார் 50 மடங்கு என்றால் நம் தேவையைப்போல் பல மடங்கு நீருள்ளது எனப் பொருள். மனிதத்திறமை, கனிப்பொருள்கள், பணம், தான்யம், ஆகிய அனைத்தும் இன்றுள்ளதுபோல் 10 மடங்கு, 50 மடங்கு பெருகும் நிலையுள்ளது என்பது ஆராய்ச்சியாளர் கூறுவது.

- ***மனம் மாறினால் நிலைமை மாறும் என்பது அடுத்த கட்டம்.***
- ***மனிதனுக்குரியது அனந்தம், அபரிமிதம். அவனே ஏற்படுத்தியது "அளவு".***

❋ ❋ ❋

## P. 16. In her he met his own eternity

### அவளுள் அவன் தன் பிரம்மத்தைக் கண்டான்

அன்றிலிருந்து இன்றுவரை மனிதன் இறைவனைத் தேடுகிறான். இறைவனைக் கடவுள் எனவும், சுதந்திரம் எனவும், சாகாவரமாகவும், ஜோதியாகவும் மனிதன் கருதுவதுபோல், காலத்தைக் கடந்த (**eternity**) நிலையாகவும் கருதுகிறான். பிரம்மம் காலத்தைக் கடந்ததால், அதையே பிரம்மமாகவும் மனிதன் நினைக்கிறான்.

- எந்த வேலை செய்தாலும், எதைத் தேடினாலும் மனிதன் இறைவனையே நாடுகிறான்.
- தனக்குத் தேவையானவற்றிலும், தன்னைக் கவர்வதிலும் இறைவனைக் காண்பது மனிதனுக்கு முக்கியம்.
- மனிதன் தான் விரும்பும் பெண்ணை தெய்வமாக மனதில் வரிக்கிறான்.
- பிரம்மத்தைத் தேடும் மனிதன் பெண்ணில் பிரம்மத்தைக் காண்கிறான்.
- ஆரம்ப நிலையில் பெண்ணைத் தேடும் ஆண் தான் பெறும் பிள்ளைகளால் தன் உடலை நித்தியமாக்குகிறான்.
- முடிவான கட்டத்தில் மனிதன் ஈஸ்வரனாகி, சக்தியைத் தேடி பூரணம் பெறும்பொழுது ஆன்மா நித்தியம் பெறுகிறது.
- மரபு பெண்ணை விலக்கி தவத்தை நாடியது.
- பூரண யோகம் பெண்ணை ஏற்று விலங்குணர்வை விலக்கி அவளுள் ஆன்மீகப் பூரணம் பெறுகிறது.



இந்தப் பக்கத்திலுள்ள இதர கருத்துகள் :

- எதையும் தெய்வீகமாக்கும் ஆன்மீகம்.
- இடையில் வெளியாக எழுந்தாலும் ஒளியின் இரகஸ்யம் ஒளிந்துள்ள இடங்களாகும்.
- சொல்லை அமைதியாகத் தொகுத்தவள் அவள்.
- அமைதியின் ஊற்றென அமைந்த பெருவெளிக் கண்டம்.
- ஆதியின் அக்னி அமைதியாகப் பரவிய சமுத்திரம்.
- தெய்வத்தின் வலிமையையும், மோனத்தின் பொறுமையையும் உடையவள்.
- உள்ளத்து வெளி அவளுள் பரந்து நின்று தன்னைப் பிரதிபலிக்கிறது.
- சூட்சும வெளியின் இதமான அரவணைப்பு உயர்ந்து திரண்டது.
- அவளே அவனுடைய சொந்த இல்லமென உலவும் வகை.
- அவளது இளமை அரியாசனத்தில் ஆனந்த கொலுவிருந்தது.
- சுவர்க்கத்தின் அமைதியான கவசம் தெய்வீகக் குழந்தையைப் பாதுகாத்தது.
- புவியின் கடும் சுவாசம் அப்பளிங்குக் கண்ணாடியைக் கரைப்படுத்தவில்லை.
- மனித வாழ்வின் பாரத்தைச் சுமக்க அவள் முடிவு செய்தாள்.

❊ ❊ ❊

## அன்பர் கடிதம்

அன்னையின் அருளாலும் ஆசியாலும் நாங்கள் மிகமிக நன்றாக இருக்கிறோம். அன்னை எங்கள் வாழ்க்கையில் நடத்திய அற்புதங்களைப் பற்றி எழுத நினைத்ததன் பலனே இந்த கடிதம்.

கடந்த **February** மாதம் ஒரு **function attend** செய்வதற்காகக் குழந்தைகளுடன் குருவாயூர் சென்றிருந்தேன். அங்கே ஏதோ **uthsavam** நடப்பதால் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. கோவிலின் அருகிலேயே இருந்த சத்திரத்தில்தான் **function** நடந்தது. திடீர் என்று என் 2 வயது குழந்தையைக் காணவில்லை, யாரைக் கேட்டாலும் எந்தவிதத் தகவலும் தெரியவில்லை, **function attend** செய்தவர்கள் அனைவரும் கோவிலுக்குச் சென்றுவிட்டதால் குழந்தையைத் தேடக்கூட யாரும் இல்லை. ஒரு நிமிடம் குழந்தையைக் காணோம் என்றவுடன் பதட்டம் அடைந்து வாசலுக்கு வந்தேன். அந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் நிறுத்தி அன்னையை நினைத்தேன், குழந்தையைப் பத்திரமாகக் கொண்டு சேர்க்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். நான் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு இருப்பதைப் பார்த்த ஒரு பெரியவர் என்னை அழைத்து, ஒரு பெண் குழந்தை **main road**இல் அழுது கொண்டு நிற்பதாக ஒரு **car driver** இங்கு வந்து சொன்னதில் ஒரு **lady** இங்கிருந்து போய் இருக்கிறாள். உங்கள் குழந்தையாக இருக்கலாம் என்று சொன்னார். **Mother has shown me a direction in which the child has gone.** நான் **pray** செய்தவாறே அந்தப் பக்கம் சென்றேன், **what a miracle it was. That lady was carrying the child, along with the driver she was coming.** குழந்தை அழுது கொண்டு இருந்ததைப் பார்த்த அந்த **car driver** சத்திரத்தில் வந்து சொன்னதால் அந்த **lady** ஓடிப்போய் பார்த்ததில் அந்தக் குழந்தை சத்திரத்தில் விளையாடிக் கொண்டிருப்பதை ஏற்கனவே பார்த்திருந்ததால், அது **function**க்கு



வந்த குழந்தை என்று தூக்கிக் கொண்டு வந்தார். எங்களுக்குள் முன் பின் அறிமுகம் ஏதும் கிடையாது. அந்த **car driver is from Pondicherry**. அன்னை அந்த **driver** மூலம் என் குழந்தைக்கு எந்த ஆபத்தும் வராமல் காப்பாற்றிக் கொடுத்தார். அன்னைக்கு என் பூரண நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

(2) அன்னையைப் பற்றி நாங்கள் அறிந்தது 1993 **August** மாதத்தில், அன்றைய எங்கள் நிலைமை, குழந்தை பிறக்காத நிலைமை, டாக்டர்களால் **adopt** செய்யும்படி **advice** செய்யப்பட்ட நிலைமை, **business**இல் **loss** ஏற்பட்டு கடன் கொடுத்தவர்களால் சூழப்பட்டு, அவமானப்பட்டு, கடனைத் தீர்க்கவே முடியாது என்று குடும்பமே முடிவு செய்து ஒரு **stage**இல் தற்கொலைதான் வழியோ என்று நினைத்தாலும் கடனைத் தீர்க்காமல் போகக்கூடாது என்று உணர்ந்தாலும், என்ன வழி என்று தெரியாமல் நடுத்தெருவில் கலங்கித் தவித்த நேரம். அன்னை என்று ஒருவர் இருக்கிறார் என்று யாரோ அறிமுகப்படுத்தினாலும், அவர் எத்தகைய அருளைப் பொழியக் கூடியவர், அதைப் பெற நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் உணர்ந்தது தங்கள் புத்தகங்களால் மட்டும். அதை முடிந்த வரையில் **follow** செய்தோம். முதலில் **Rs.**4750/-க்கு வேலை கிடைத்தது. அதுவே பிறகு 10,000 ஆகவும், 15,000 ஆகவும், 19,000 ஆகவும், 25,000 ஆகவும் பிறகு 40,000 ஆகவும் மாறி அநேகமாக **all personal liabilities**உம் முடிந்த நிலையில் கிட்டத்தட்ட இன்னும் 25 **lakhs** அப்படியே இருந்து கொண்டிருந்தது. இதற்கு எந்தத் தீர்வும் காணப்படாத நிலையில், **bank has started exerting pressure on us.** ஆனால் நாங்கள் அன்னை நிச்சயம் ஒரு வழி செய்வார் என்று உறுதியாக நம்பி பிரார்த்தனையையும் அந்த **bank liability**ஐ நாங்கள் எந்த மனநிலையில் **acquire** செய்தோம் என்று நினைத்துப் பார்த்து அதில் இருந்த தவற்றை உணர்ந்து மன்னிக்குமாறு வேண்டி கடன் களைய வழி செய்யுமாறு பிரார்த்தனை செய்தோம். என் கணவருடன் வேலை பார்த்த அனைவரும் **US** சென்றுவிட

மனதளவில் சிறிது **dejected** ஆனாலும் உடனே அன்னையை அழைத்து நல்ல மனநிலையில் **pray** செய்தோம்.

திடீர் என்று **equally good company** ஒன்றில் இருந்து என் கணவரின் பெயர் ஒரு **executive**ஆல் **refer** செய்யப்பட்டதாக அழைப்பு வந்தது. **Interview attend** செய்து **offer letter** கடந்த 13**th** கொடுத்துவிட்டார்கள். என்ன செய்வதென்று முடிவு செய்ய முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தவரை அன்னை ஒரு சூழ்நிலைக்கு தவிர்க்க முடியாமல் கொண்டு வந்து **resignation letter** கொடுக்கச் செய்துவிட்டார், அந்தக் **company double the salary** கொடுத்ததோடு மட்டுமில்லாமல் **stock option** வேறு கொடுத்திருக்கிறார்கள். அதை விற்கும் உரிமை சேர்ந்ததிலிருந்து 18 மாதங்களுக்குப் பின்தான் வரும் என்றாலும் இன்றைய அதன் மதிப்பு ரூபாய் 30 இலட்சங்கள். எங்கள் கடன் தொகையை விட அதிக மதிப்பு. இதை நினைக்கும்போது நன்றியினால் அழமட்டுமே தோன்றுகிறது. 1994இல் 75 லட்சம்வரை கடனாளியாக இருந்த எங்களை இன்று இந்த 5 வருடத்தில் யாரும் நினைத்துக் கூட பார்த்திராத வகையில் கடனை அடைத்து சொத்து சேர்க்கும் வழியையும் கொடுத்த அன்னையை எங்களுக்கு புத்தகங்களின் வாயிலாக அறிமுகப்படுத்திய உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❊ ❊ ❊





## "அந்தராத்மாவின் குரல்"

"நான் நிர்வாணத்தை எய்தியபின் எனக்கு **ambition** பேராசை அழிந்துவிட்டது என நினைத்தேன். நாட்டுக்குச் செய்யும் சேவையில் எனக்குச் சொந்த இலாபமில்லை எனக் கருதினேன். கல்கத்தாவை அடைந்தபொழுது உள்ளிருந்து குரல் சில எண்ணங்கள் எழுவதைக் காட்டியபொழுது சொந்த ஆதாயம் மனதிலிருப்பது தெரிந்தது." - ஸ்ரீ அரவிந்தர்.

**நம்முள் உள்ள குறைகள் நெடுநாள்வரை நம்முள் ஒளிந்திருக்கும் என பகவான் சுட்டிக் காட்டுகிறார்.**

கோபத்தை அழிக்க சிலர் முற்படுவதுண்டு. கோபம் வந்துபோன சில நாட்களுக்குப் பின் கோபமில்லை என்பது தெரியும். கோபத்தின் தன்மையை உணராதவர் கோபமில்லை, இப்பொழுதில்லை என்பதை கோபமே தன்னை விட்டுப் போனதாகப் புரிந்துகொள்வார். அடுத்த முறை கோபம் வரும்பொழுதுதான் உண்மை நிலை தெரியும்.

**நம் குணங்கள் வெளிப்படும்பொழுதுதான் அவையிருப்பது தெரியும்.**

**வெளிப்படாதபொழுது அவற்றின் தன்மை, விவரம், வேகம், வீச்சு தெரியாது.**

சிலர் மீது சாமி வரும். அப்பொழுது அவர்கள் ஆவேசமாகப் பாடுவார்கள், ஆடுவார்கள். இவர்களில் சிலர் சாதுவான சுபாவமுள்ளவராகவுமிருப்பார்கள். ஆவேசம் வந்தபொழுது அவர்களை அடையாளம் தெரியாது.

வேறு சிலர் நான் உங்களுடன் உள்ளபொழுது நீங்கள் சொல்வது சரி எனப் படுகிறது. நண்பர்களுடனுள்ளபொழுது அவர்கள் சரி எனப் படுகிறது. யாருடன் இருந்தாலும் அவர்கள் சரி

எனப்படுகிறது என்பர். அவர்களை **unformed personalities** எடுப்பார் கைப்பிள்ளை, யார் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வான் என்பார்கள். சொந்தமாகப் புரியும் திறமையற்றவர்கள் இவர்கள்.

அன்னையைத் தீவிரமாக வழிபட ஆரம்பித்தால் நம் குறைகளே இருக்கா. பார்ப்பவர்கள் நாம் அளவு கடந்து மாறிவிட்டதாக நினைப்பார்கள். அவர்கள் நினைப்பது மேலெழுந்தவாரியாகச் சரி. ஆனால் அது நிரந்தர மாற்றமில்லை. கோபம் வரும்பொழுது குணங்கள் வெளிப்படும். இல்லை என நினைத்தேன் எங்கேயிருந்து புறப்பட்டு ஆசை வருகிறது எனத் தோன்றும். நாம் என்பது இரு பிரிவாக - மேலும், கீழுமாக **consciousness, substance** - அமைந்துள்ளது. நாம் அதிகபட்சம் அறிவது மேல் பாகமே. ஆழம் என்பது அதன் ஆழமே. அதைக் கடந்த நிலையைக் கண்ட ரிஷிகள் காயமே இது பொய் என்றனர். சுபாவம் ஆழ்ந்தது. லேசில் மாறாது. ஆனால் யோகத்தை மேற்கொள்பவர்கட்கு சுபாவம் மாறுவது அவசியம்.

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கட்டுக்கடங்காதது கட்டுப்பட்டால் நிறைவேற்றப்படும். சிறிய ஆசைகளை நாடிச் செல்வதை விட்டொழித்தால் நிறைவு தேடிவரும். அடியிலுள்ள துவாரத்தை அடைத்தால் நம் நிலை உயருகிறது. பின் நிறைவுக்குச் செறிவும், வேகமும் வரும்.

*சிறியதை விட்டால், பெரியது தேடி வந்து நிறைவு தரும்.*





## “குறுக்கே பேசாதே”

**Customer is king.** வாடிக்கைக்காரரை ராஜாவாகக் கருது என்பது மானேஜ்மெண்ட் முறை. இது சுமார் 70, 80 ஆண்டுகளாக வளர்ந்து இன்று உலகம் போற்றும் முறையாகவுள்ளது. இதைத் தெரியாத வியாபாரமில்லை. பொய் சொல்லக்கூடாது எனத் தெரியாதவரில்லை என்பதே சரியான உதாரணம். அத்துடன் அதை முழுவதும் கடைப்பிடிப்பது சிரமம் என்பதும் தெரியும். நாம் பல இடங்களில் உண்மையாக இருக்கிறோம். மற்ற இடங்களில் அப்படி இருப்பதில்லை. மெய் உள் வட்டம். பொய் வெளிவட்டம். மெய் என்ற வட்டத்தை சற்று விரிவுபடுத்தினால் மனமும், ஆன்மாவும், வாழ்வும் பெரிய அளவில் உயரும். மனிதன் மனத்திற்குரியவன். இந்த 4 நிலைகள் கடந்தபின் சத்திய ஜீவியம். அடுத்த இரண்டு நிலைகள் கடந்த பின் சத் புருஷன்.

சத் புருஷன் - சிருஷ்டியின் ஆரம்பம்.

சத் என்பது அக நிலை **subjective state.**

சத்தியம் என்பது சத்தினுடைய **objective state** புறநிலை.

மெய், உண்மை, சத்தியம் என்பது நாமுள்ள நிலையைக் கடந்த - 6 நிலைகள் கடந்து சிருஷ்டியின் ஆரம்பமான சத் புருஷனுடைய - நிலை. அதனால் இது சக்தி வாய்ந்தது. இந்தியாவின் சுதந்திரச் சின்னம் சத்தியமேவ ஜெயதே.

நாம் பொய்யே சொல்லக் கூடாது, பொய்யை மனதில் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு விஷயத்தில் முடிவு செய்தால் அவ்விஷயத்தில் பிரம்மத்தை நெருங்குவோம். அபார வெற்றி கிடைப்பது ஆச்சரியமில்லை. அதிக வியாபாரம் செய்ய குறுக்கே

பேசாதே எனச் சொல்லும் முறை பொய் சொல்லாதே என்பதில் ஓர் சிறு பகுதி, இதைக் கடைப்பிடித்தால் தொழில் சிறக்கும் என்பது உலக அனுபவம். இது முடியாது என்பதால் இம்முறையைக் கற்பிப்பவர்கள் குறுக்கே பேச நினைத்தால், 'மூச்சை அடக்கி 1,2,3... என எண்ணு' என்று பயிற்றுவிப்பார்கள். அதைச் செய்யலாம், உயிர் போய் உயிர் வரும். அதைப் பின்பற்ற அன்னை முறையுண்டு.

- **குறுக்கே பேசக்கூடாது என முடிவு செய்து முடிவைச் சமர்ப்பணம் செய்து, பிறகு பேச்செழும்பொழுது அன்னையை நினைத்தால் இனிமையாக முடிவு நிறைவேறும்.**

ஒரு சேல்ஸ்மேன் இதை அன்பரிடம் பயின்றார். நடைமுறை கடுமையாக இல்லை, அதிக வியாபாரமாகிறது எனக் கண்டார். இந்த சேல்ஸ்மேன் போன்றவர்கட்குச் சம்பளம் அவர்கள் விற்பதைப் பொருத்தது.

ஏழாம் நாள் அவர் வழக்கமாக விற்பதைப்போல் இருமடங்கு விற்றார்.

இம்முறையின் பலனை மேலும் உயர்த்த இம்முறையின் அடிப்படைத் தத்துவத்தை மனதால் புரிந்து கொண்டு, புரிவதைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அப்படிச் செய்த ஒருவருக்கு 18ஆம் நாள் ஓராண்டு விற்பனைப்போல் $1^1/_3$ பாகம் ஒரே ஆர்டராக வந்தது.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரிக்கும் கருவி மனம். பிரிவினையால் திறன் பெறுவது மனம். புறவெளியில் உள்ளவற்றின் ஒருமைப்பாட்டை உணர்ந்தால் மனத்தைக் கடக்க இயலும்.

*சேரும் மனப்பான்மை பிரிக்கும் மனத்தைக் கடக்கும்.*





# பழக்கம் பழைய நிலையை நீடிக்கும் மலர்ச்சி அன்னையை நிலைநிறுத்தும்

(சென்னை - மாம்பலம் - தியான மையத்தில், பிப்ரவரி 4, 2001இல், திரு. P.V. பாலகிருஷ்ணன் நிகழ்த்திய உரை)

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம் என்பது போல் உணவு, தூக்கம், உடை, பண்பு, பாவனை போன்ற எவையும் பழக்கத்தால் சிறப்பெய்தியவை.

**உலகத்து நாகரீகம் அனைத்தும் உயர்ந்த பழக்கத்திற்குரியவை.**

**பழக்கம் உடைந்து மனம் மலர்ந்ததால் மட்டுமே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

பழக்கமில்லாவிட்டால் பயனில்லை. மனிதனுக்குப் பழக்கமுண்டு. குடும்பத்திற்குப் பழக்கமுண்டு. அதை 'அவர்கள் குடும்பப் பழக்கம்' என்போம். ஜாதிக்குப் புத்தியுண்டு. அது பழக்கமானால் 'ஜாதி புத்தி' என்பர். செட்டிப்பிள்ளை கெட்டிப் பிள்ளையாகும். ஊருக்குப் பழக்கமுண்டு. உலகத்திற்கும் பழக்கமுண்டு. அவற்றைப் பண்புகள் என்கிறோம். ஒரு காரியத்தைச் செய்து கற்ற பின் திரும்பத் திரும்ப விரும்பி அதையே செய்யும் திறன் பழக்கம் என வழங்குகிறது. பழக்கங்கள் நல்லவை, கெட்டவை எனப் பிரியும். நல்லவையானாலும், அல்லவையானாலும், அடிப்படையில் இரண்டும் பழக்கங்களாகும்.

**பழக்கத்தால் ஏற்பட்டு நின்று நிலைத்த பண்பை உலகம் ஏற்றுப் போற்றும்.**

பண்புகள் உடலுக்குரிய உடல் நலப் பண்புகள், வாழ்வுக்குரிய நடைமுறைப் பண்புகள், அறிவுக்குரிய மனநிலைகள், ஆன்மா

பக்குவப்பட உதவும் ஆன்மீகப் பண்புகள் என நால்வகையானவை. உடலுக்குரிய பண்புகள் எளிதில் மாறக் கூடியவை அல்ல. அதை மனித சுபாவம் எனக் கூறி நாய் வாலுக்கு ஒப்பிடுகிறோம். ஆன்மீகப் பண்புகள் இந்தியாவில் வளர்ந்து நிலைத்தால் உலகத்தின் குருவாக நாடு மாறும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

- **கடைசி கட்டமான உடலின் பழக்கத்திற்கும் உயிர் உண்டு.**
- **முடிவான ஆன்மீகப் பண்புக்கும் பழக்கத்தின் உயிரற்ற இறுக்கம் உண்டு**

என்பது சிருஷ்டியின் அடிப்படையான ஆன்மீக உண்மைகளில் ஒன்று. பழைய நிலைமை நீடிப்பது பழக்கத்தின் இறுக்கம். ஆன்மாவின் மலர்ச்சி அன்னையை வாழ்வில் அனுமதித்து அவர் பொறுப்பில் நம் வாழ்வை ஒப்படைத்தல் என்பது தலைப்பு. இதுபோன்ற கருத்துகளை அன்னை விரும்பினார், போற்றினார். அதனால் இக்கருத்தின் கூறுகள், பிரதிபலிப்புகள், அம்சங்கள், பகுதிகள் என்ன என்பதை அன்பர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளின் மூலம் அறிவது ஆன்மா பலன் பெற உதவும். நீங்கள் என்னை மறந்தாலும், நான் எவரையும் மறக்கமாட்டேன் என்று அன்னை கூறுவதை, மாற்றி அன்னையை நான் மறந்தாலும் என் ஆன்மா மறக்கக் கூடாது என்று கூற உதவும் கருத்தை தலைப்பு தொடுகிறது.

ஆபத்து நேரத்தில் எவருக்கும் பழக்கம் வெளிப்படும். ஆபத்து பெரியதானாலும், பழக்கமில்லாததானாலும், பழக்கம் விலகி, புதுமை எழும். அப்படி நடப்பது சிறப்பாக அமையும். சமயோசிதமான அறிவுக்கு மலர்ச்சியுண்டு. அது பழக்கத்தைக் கடந்தது. வழக்கமாகப் பொய் மட்டும் பேசுபவர் தம்மைப் பழக்கத்திற்கு அடிமைப்படுத்த மாட்டார். அவர்கள் என்றும் புதுமையின் மலர்ச்சியுடனிருப்பார்கள். துரோகத்திற்கும் அத்துணிவுண்டு. பேட்டிகளில் பதிலளிப்பவர்கள், மேடையில் பேசுபவர்கள், கையும் களவுமாக திருடும்பொழுது அகப்பட்டவர்கள் இதுபோன்ற புதுமை, மனமலர்ச்சி, ஆத்மா



வெளிவந்து செயல்படுவது போன்றவற்றைக் காண்பார்கள். மலர்ச்சி பொய்க்கும் உண்டு, நல்லதற்கு மட்டுமன்று என்பது வாழ்வுக்குரிய உண்மை.

சமர்ப்பணத்தைப் பற்றிப் பேசும்பொழுது அன்னை "எண்ணங்கள் உணர்வுகள், உந்துதல்கள், பழக்கங்களைச்" சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்கிறார். சமர்ப்பணமும், சரணாகதியும் யோகத்திற்குரியவைகள். அன்பர்கள் வாழ்விலிருப்பவர்கள். வாழ்வில் யோகம் என்பது பிரச்சினை தீருவது. பிரச்சினை தீர சமர்ப்பணத்தை மேற்கொண்டால், சமர்ப்பணம் சற்று ஆரம்பித்தவுடன் பிரச்சினை தீர்ந்து விடுவதால், அன்பர்கள் சமர்ப்பணத்தை முழுவதும் அறிய முடிவதில்லை. எண்ணம் என்பதைக் கருதினால்,

- ***எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்வது எளிதன்று எனத் தெரியும்.***
- ***தொடர்ந்து முயன்றால் முடியாது என்று கைவிட்டு விடுவார்கள்.***
- ***அது ஒருவருக்குப் பலித்தால், அவருக்கு யோகத் தகுதியுண்டு.***
- ***அடுத்தாற்போல உணர்வைச் சமர்ப்பணம் செய்ய முயன்றால், எண்ணமே சுலபமாகத் தெரியும்.***
- ***அதையும் செய்தவர் impulse உந்துதலைச் சமர்ப்பணம் செய்யமுயல்வது குளத்தில் நீரை விலக்குவதுபோல் என அறிவார்.***
- ***கடைசியாகச் சமர்ப்பண வரிசையில் நிற்பது பழக்கம், உடலுக்குரியது.***
- ***அது மிகக் கடினம், ஏனெனில் உடல் இருளாலானது.***
- ***உடலுக்கு consciousness ஜீவியம், substance பொருள் என இரு பகுதிகளுள்ளன.***

- ஜீவியம் சூட்சுமமானது.
- பொருள் ஜடமானது.
- ஜடமான பொருளில் computer chipஇல் software commands இருப்பதைப்போல் பழக்கம் ஊறியுள்ளது.
- பழக்கத்தை விடமுடியாது என்பதை சுபாவம் மாறாது என்கிறோம்.
- பழக்கம் மாறாது என்பது மட்டுமன்று, அது அடுத்த, அடுத்த தலைமுறைகள் எனத் தொடர்ந்து வரும். அழியாது. அதனால் அது மாற்றத்திற்கு எதிரி. ஆன்மீக மாற்றத்திற்குப் பரம வைரி.

உலகம் மாறும்பொழுது பழக்கங்கள் அளவு கடந்து மாறுகின்றன. எதிராகவும் மாறுகின்றன. ஒரு பழக்கம், வேறு பழக்கமாகலாம், ஆனால் பழக்கம் என்பது நிலையாக இருக்கும். அதனால் பழக்கத்தை மாற்றுவது முடியாது. சமர்ப்பணத்திற்கும், சரணாகதிக்கும் பழக்கமும் தலை வணங்கும் என்றாலும் அது மனிதன் சந்திரமண்டலத்தை எட்டுவதுபோலாகும். இதுவரை பழக்கத்தால் ஆட்கொள்ளப்படாத இடத்தில் மலர்ச்சி spontaneous behaviour முடியும். பழக்கத்தை விலக்குதல் சிரமம், மாற்றுவதோ, அழிப்பதோ கடினம்.

பழக்கம் மனிதன், விலங்கு ஆகிய இருவருக்கும் உண்டு. மேலும் ஜடப்பொருட்கட்கும் பழக்கம் உண்டு. அதை நாம் அப்பொருளின் இராசி என்கிறோம்.

- இது ராசியான வீடு.
- இந்த tennis racket டென்னிஸ் மட்டைக்கு இராசி உண்டு.
- இந்தப் பேனாவால் எழுதிய எந்தப் பரீட்சையும் பெயிலாகவில்லை.



- நான் இப்பேனாவால் எழுதிய எந்தப் பத்திரமும் இதுவரை கோர்ட்டுக்குப் போகவில்லை என்பது பேனாவின் இராசி.

**இராசி என்று நாம் கூறுவது ஜடப்பொருள் பெற்ற பழக்கம் - நல்ல பழக்கத்தை இராசி என்கிறோம்.**

நீரோட்டம் மேட்டிலிருந்து பள்ளத்திற்குப் போவதை நாம் பழக்கம், இராசி என்று கூறுவதில்லை. புவிஈர்ப்புச் சக்தி என்கிறோம். ஓர் அன்பர் தம் வீட்டுத் தரையில் தண்ணீர் விட்டு அலம்பும்பொழுது வாட்டம் தலைகீழாக இருப்பதால் நீர் ஓட்டம் உள்நோக்கி வருவதைக் கண்டார். வழக்கமாக நீரை வலிய தள்ளுபவர், ஏன் அன்னையிடம் கூறக்கூடாது என்று நினைத்துக் கூறினார். நீர் பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கி ஓடுவதைக் கண்டார். புவி ஈர்ப்புச் சக்தியை மீறும் திறன் சக்திக்குண்டு. அது செயல்பட பழக்கம் தடை, மலர்ச்சி உதவும்.

அகதி முகாமில் நாம் யார்? என்ன படிப்பு? என்ன உத்தியோகம் செய்தோம், என்ன அந்தஸ்து என எவரும் அறியமாட்டார்கள். அத்துடன் ஏதாவது வேறு நாட்டில் முகாம் போடுவதால், பாஷை தெரியாது. எப்படி நம் தேவைகளைப் பூர்த்தி செய்வது? ஷாங்காய் நகரில் அப்படி ஒரு முகாமில் ஜெர்மானிய யூதர் ஒருவரிருந்தார். தம் சொந்த சாமர்த்தியத்தால் சிறு காரியங்களையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இது பகீரதப் பிரயத்தனம். தாம் பெற்ற எந்த உயர்ந்த பழக்கமும் பலன் தரவில்லை அங்கு எனக் கண்டார். புதிய மௌனமான திறன்களைப் capacity பெற்றார். முகாமிலிருந்து விடுபட்டு அமெரிக்கா திரும்பி, அங்கு citizenship குடிமகனானார். சர்க்காரில் Treasury secretary ஆனார். அது மத்திய நிதிமந்திரிப் பதவி. ஓய்வு பெற்று தொழில் நடத்தினார். பல பெரிய கம்பெனிகளை இணைத்து புதிய பெரிய கம்பெனி ஒன்றை 25 ஆண்டுகட்கு முன் ஆரம்பித்தார். அதன் மூலதனம் $10 பில்லியன். அன்றைய மதிப்பு ரூபாயில் 10,000 கோடி. தாம் பெற்ற அனுபவங்களைப் புத்தகமாக எழுதினார். ஷாங்காய் நகரில் அகதி முகாமில் தாம் கற்றவை

அனைத்தும் - பழக்கங்கள் - பயனில்லை என்றபொழுது புதியதாக தாம் அப்பொழுது பெற்ற திறமையே தாம் முன்னுக்கு வரக் காரணம் என்று அந்நூலில் எழுதினார்.

**பழக்கம் முன்னேற்றத்திற்குப் பகை.**

**மலர்ச்சி அருள்பெறும் மகத்தான முறை.**

சென்னை பிரசிடென்சி கல்லூரி மாணவர் அகில இந்தியப் பேச்சுப் போட்டிக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வந்திருந்தார். பட்டமளிப்பு விழா மண்டபத்தில் கூட்டம். மண்டபம் நிறைய மாணவர்களும், ஆசிரியர்களும் பேச்சுக்களைக் கேட்டு மகிழ்ந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர். நடுவர்கள் தங்கள் மார்க்குகளை எடுத்துக் கொண்டு பின்புறம் சென்று ஆலோசனை செய்யும்பொழுது பிரசிடென்சி மாணவர், எனக்குப் பாடவேண்டும்போல் தோன்றுகிறது என்றார். அதைக் கேட்ட நிர்வாகி அவரைப் பாடச் சொன்னார். மேடைக்கு வந்து ஹிந்திப்பாட்டு ஒன்று பாடினார். இதுவரை இல்லாத ஆரவாரம். மாணவர் அகமகிழ்ந்தனர். தமிழ்ப்பாட்டு ஒன்று பாடினார். மண்டபம் அதிரும்படி கோஷம், பேச்சுப் போட்டியில் அவருக்கு பரிசு வரவில்லை. பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவரை எவரும் கருதவில்லை. பாடகர் பிரபலமானார். மறுநாள் பல்கலைக்கழகத்தினர் பல இடங்களிலும் அவரைப் பாட அழைத்தனர். அவர் பிரபலம் அதிகரித்தது.

**தானாக எழும் (spontaneous) பாட்டு, நாமே தயார் செய்யும் பேச்சைவிட மனிதனுக்கு ஜீவனளிக்கிறது.**

ஜாமெண்ட்ரி (geometry) தேற்றங்களுண்டு. அவை பல கணித மேதைகளால் கண்டுபிடிக்கப்பட்டவை. பொதுவாக ஒருவர் வாழ்நாள் முழுவதும் சிந்தனை செய்து ஒரு தேற்றம் கண்டுபிடிப்பார். அடுத்தவர் சில எழுதுவதும் உண்டு. சீனுவாச ராமானுஜம் உடல் நலம் குன்றி படுக்கையாயிருந்தபொழுது ஹார்டி என்ற பேராசிரியர்



அவரைக் காணச் சென்றார். ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஹார்டி சுட்டிக் காட்டியபொழுது அதற்குரிய தேற்றத்தை ராமானுஜம் உடனே கூறினார். அது ஹார்டிக்கு ஆச்சரியம் தந்தது. நெடுநாள் சிந்திப்பதன் பலனாக எழும் தேற்றம் எப்படி மனத்தில் உடனே எழுந்தது எனப் புரியவில்லை. ஹார்டி எழுந்து போகுமுன் ராமானுஜம் மேலும் 5 தேற்றங்களைக் கூறினார். படிப்பு பட்டம் பெற நாம் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்கிறோம். அதை நன்கு அறிந்தவர் ஹார்டி.

**அவரறிந்தது பழக்கம்.**

**இராமானுஜத்தின் மனம் கணிதத்தைப் பொறுத்தவரை அறியாதது பழக்கம்.**

**இராமானுஜத்தின் மனதில் தேற்றம் தானே எழும் - அது மலர்ச்சி.**

### பழக்கம், தேவை

இவை மாறுபட்டவை. திரும்பத் திரும்ப செய்வதால் எழுவது பழக்கம். தேவை பழக்கத்திலிருந்து மாறுபட்டது. உடலுக்குத் தேவையான உணவை நாம் பழக்கப்படுத்திக் கொள்வதால் அத்தேவையைப் பழக்கம் என அறிவது சரியன்று. பேசும் பழக்கம், காப்பி குடிக்கும் பழக்கம், மாலையில் உலவும் பழக்கம், பொய் சொல்லாத பழக்கம், பிடிவாதம் பிடிக்கும் பழக்கம் போன்றவை தேவையான பேச்சு, அவசியமான காப்பி, உடலுக்குத் தேவையான நடை, ஆத்மாவுக்குத் தேவையான சத்தியம், உறுதியாகச் செயல்படும் அவசியம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டவை.

பழக்கம் காலத்திற்குரியது. மலர்ச்சி காலத்தைக் கடந்தது. பழக்கத்திற்குட்பட்டவர் தம்மைப் போன்ற மற்றொருவர் மலர்ச்சியுடையவராக இருப்பதை அறிந்தால், பிற்காலத்தில் அவர்கள் வாழ்வுநிலை, வாழ்க்கைத் தரம், அந்தஸ்து அளவு கடந்து வேறுபட்டிருப்பதைக் காணலாம்.

வாழ்வில் வளமும், சுபிட்சமும் அளவு கடந்து பெருகினால், பழைய பழக்கங்கள் அளவு கடந்து மாறுவதைக் காணலாம்.

**பழைய பழக்கமும் புதிய சுபிட்சமும் சேரா.**

**Pride and Prejudice** கதையில் டார்சி செல்வன். அவனை மணக்க எவரும் விரும்புவர். தான் விரும்பிய பின் எந்தப் பெண்ணும் தன்னை ஏற்கத் தயங்க மாட்டாள் என்பது அவன் அபிப்பிராயம். ஏனெனில் அதுவே உலகத்தில் பழக்கம். அதுவரை அவனறிந்த பழக்கமும் அதுவே. எந்தப் பெண்ணுக்கும் தான் அதிர்ஷ்டமான வரன். எலிசபெத் ஆர்வமாக, ஆச்சரியமான தன்னை ஏற்பாள் என தன் பழக்கப்படி நினைத்தான். தான் அவளைச் சந்திப்பதே அவளுக்கு பாக்கியம் என்று நினைத்தான். ஷார்லோட் உலகை ஒட்டி வளர்ந்தவள். அவளும் அப்படியே நினைத்தாள்.

ஒரு நாள் பார்க்கில் எலிசபெத், ஷார்லோட்டுடன் உலவப் போன பொழுது ஷார்லோட்டின் தங்கையும் உடனிருந்தாள். காலின்ஸ் ஓடி வருகிறான். டார்சி அவர்கள் வீட்டிற்கு வருவதாகவும், உடனே இருவரும் வந்து அவனை வரவேற்க வேண்டும் எனவும் பதை பதைத்துக் கூக்குரலிடுகிறான். எலிசபெத் கேட்டுக் கொண்டாள். ஷார்லோட் அதைக் கேட்டவுடன் “டார்சிக்கு உன் மீது அபிப்பிராயமிருக்க வேண்டும். என்னைப் பார்க்க இவ்வளவு சீக்கிரம் டார்சி வருவதில்லை” என எலிசபெத்திடம் கூறுகிறாள். காலின்ஸ் செய்த ஆர்ப்பாட்டத்தில் இவள் தங்கை அவனை நோக்கி ஓடுகிறாள்.

அடுத்து ஒரு நாள் ஷார்லோட் வெளியிலிருந்து திரும்பி வந்த பொழுது டார்சி எலிசபெத்துடன் தனியே பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு, ‘எனக்குச் சந்தேகமேயில்லை. டார்சிக்கு உன்னை மணக்க ஆசை’ என்கிறாள். இது உலகம். டார்சி இவ்வுலகத்தைச் சேர்ந்தவன். இது போன்ற அபிப்பிராயங்களுடன் டார்சி ஒரு நாள் எலிசபெத்திடம் வந்து தன்னை மணக்கும்படிக் கேட்கிறான். எரிமலை வெடித்தது. அது முடியாது என்று பதில் வந்தவுடன், டார்சி ஏன் முடியாது என



விளக்கம் கேட்கிறான். எரிமலையுடன் பூகம்பமும் சேர்ந்து கொண்டது.

“நீ சுயநலம், கர்வி,

உன்னை மணக்க நான் என்றும் சம்மதிக்க மாட்டேன்.

மரியாதையாகப் பழக உனக்குத் தெரியவில்லை.

உன்னைக் கண்டவுடன் நான் எடுத்த முடிவு இது, இன்றல்ல.”

**பழக்கத்தின் கோட்டையை மலர்ச்சியின் வெடிகுண்டு தகர்த்தது**. நாட்டில் நடக்க வேண்டிய புரட்சி, மனத்தில் இடம் மாறி கொந்தளித்தது. பழக்கம் தகர்ந்தது. மலர்ச்சி வென்றது. அவன் மீண்டும் வருவான் என அவள் நினைக்கவில்லை. டார்சி மனம் மாறினான். நரகத்தின் நளினங்களை டார்சி அறிய வேண்டியதாயிற்று. எதைக் கண்டு வெறுப்படைந்தானோ, அவற்றை விரும்பி நாடிப் போற்றி ஏற்க வேண்டியதாயிற்று. எலிசபெத்திற்கு பணத்தை மதித்து அடங்கும் பழக்கமில்லாதது அதிர்ஷ்டமாயிற்று.

- ***பழக்கம் ஜீவனற்றது.***
- ***மலர்ச்சி ஜீவனுடையது.***
- ***மலர்ச்சி தீண்டுபவை ஜீவன் பெறும்.***
- ***மனத்தின் அபிப்பிராயம், உணர்ச்சியின் நோக்கம், உடலின் பழக்கம் ஜீவனற்றவை.***
- ***வெள்ளை மனம் மலர்ச்சியால் ஜீவன் பெறும்.***
- ***திறந்த வெள்ளை மனமிருப்பது மனத்தில் ஒரு பிரளயமாகும்.***
- ***மனிதனுக்குரிய பழக்கம் மற்றவை அனைத்திற்கும் உண்டு.***
- ***பருவங்கள் பூமியின் பழக்கமாகும்.***
- ***ஆவேசம் உடலின் பழக்கம் உடைந்த பொழுது எழுவது.***
- ***உடலின் பழக்கம் ஆன்ம மலர்ச்சியால் உடைந்தால், உலகை உய்விக்கும் சக்தி எழும்.***

- தவற்றால் தடம் மாறியபொழுது எழுந்தவை பென்சிலின், **Post-it** ஆகியவை.
- பழக்கமாக விழும் ஆப்பிள், பழக்கத்திற்கு மாறான மனநிலையால் நியூட்டனை உலகப் பிரசித்தி பெற்றவராக்கியது.
- பழக்கத்திற்கு அடிமையான எவரும் சாக்ரடீஸ்போலவோ, ஐன்ஸ்டீன்போலவோ சாதித்திருக்க முடியாது.
- பெரியவரின் பழக்கத்தைச் சிறியவரின் மலர்ச்சி வெல்லும் நேரம் உண்டு.
- நாடு பழக்கத்தை விட்டு சிந்தனை செய்ததால் ஏற்பட்டது பசுமைப் புரட்சி.
- பழக்கமில்லாத இடங்களில் புரட்சிகரமாகச் செயல்பட முடியும்.
- புது விஷயங்களில் தடை செய்யப் பழக்கமில்லாததால், வேகமாக முன்னேறலாம்.
- வெற்றி வீரனுக்கும், வெட்கங்கெட்டவனுக்கும் மலர்ச்சியுண்டு.
- சரளமாகப் பொய் சொல்பவனுக்கு எந்த நேரமும் பொய்யில் மலர்ச்சியுண்டு.
- மனமோ, உடலோ, ஆத்மாவோ தடை செய்யாமல் உடல் அருளைப் பெறும் என்கிறார் அன்னை.
- எதையும் பழக்கமெனலாம், மலர்ச்சி எனவும் கூறலாம் என்பது தத்துவம்.
- மேடைப் பிரசங்கிக்கும், நிருபர்களைச் சந்திக்கும் அரசியல்வாதிக்கும் உள்ள சமயோசித புத்தியில் செயல்படுவது மலரும் மனம்.
- மனவளர்ச்சியற்ற மக்கட்கு மனம் வளராத காரணத்தால் தடையான பழக்கங்கள் இருப்பதில்லை.



- மலர்ச்சி நல்லவனுக்கும், கெட்டவனுக்கும், பொய்யனுக்கும், வீரனுக்கும் உண்டு.
- பழக்கத்திற்குக் கட்டுக்கோப்புண்டு. மலர்ச்சிக்கு அதில்லை.
- **Sincerity** உண்மை, **genuineness** தூய்மை, **expansiveness** பிறரில் மகிழ்ந்து மலர்வது மலர்ச்சிக்குரிய அம்சங்கள்.
- வீரனைத் தயார் செய்யும் முறை **(deconditioning)** மலர்ச்சியாகாது.
- மனம் மலர்ந்து எழும் புதுக் கருத்து மரணத்திலிருந்தும் காப்பாற்றவல்லது.
- மாட்டை விற்றுப் பணம் பெற்றவன் மாட்டைத் தர மறுப்பது அவன் பழக்கம்.
- மரணமும் அன்னைக்கு உடலின் பழக்கமாகும்.
- ஜே. கிருஷ்ணமூர்த்திக்கு 'நேற்று' என்பதில்லை. 'நாளை' என்பதுமில்லை.
- கதை மலர்ந்த மனத்தில் எழுந்தால், பாத்திரங்கள் ஆசிரியரின் போக்குக்கு இசைய மறுப்பார்கள்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் அன்னையை நாடுவது என்பதேயில்லை, எப்பொழுதும் அன்னைதான் நம்மை நாடி வருகிறார். நம்முள் மறைந்துள்ள அன்னை அவ்வப்பொழுது மேலே வருகிறார். அன்னையின் அசைவு நல்வுணர்வாகவும், நல்ல நிகழ்ச்சியாகவும் காணப்படுகிறது. அதை எதிர் கொள்வதற்குப் பதிலாக, நாம் சுவையான புற நிகழ்ச்சிகளை நோக்கி விரைகிறோம். வருவது நின்று விடுகிறது, புற நிகழ்ச்சியின் கவர்ச்சி தவிர்க்க முடியாததாக நமக்கு அமைகிறது.

*நாடுவது அன்னை விலகுவது மனிதன்.*

**Agenda**

**Vol I P. 69 Time has come**

**நேரம் வந்துவிட்டது**

'மனித முயற்சி பெரியது என்றாலும் தெய்வ சித்தம் முடிவானது. அதற்குரிய நேரம் வந்தால்தான் முயற்சி பலன் தரும்' என்பது நம் வழக்கு. *1959*இல் சத்திய ஜீவிய சக்தி **Feb** *29*ஆம் தேதி இறங்கிய அன்று அன்னை,

**புவிக்கு நேரம் வந்துவிட்டது.**

என்றார். மனிதன் இந்த சக்தியுடன் தொடர்பு கொண்டால் எதிர்காலத்தில் நடக்கப் போவது நிகழ்காலத்தில் நடக்கும். காலமும், இடமும் *(***Time & Space***)* நிகழ்ச்சிகளின் பலனை நிர்ணயிக்கின்றன. *1956*இல் வந்த சக்தி காலத்தைக் கடந்த சக்தி. அதனால் இதனுடன் தொடர்பு கொண்டால், காலம் சுருங்கும். ஒரு **Assistant Engineer** பக்தரானார். பக்தரானதுடனின்றி தம் தொழிலைச் சிறப்பாகச் செய்பவர். பக்தர்கள் சம்பந்தப்பட்ட எலக்ட்ரிகல் வேலைகளைத் தம் சர்க்கார் வேலையின் கடமைக்குப் புறம்பாகவும், ஆர்வமாகவும் செய்வார். அவருடன் பழகிய பக்தர் 'எப்பொழுது உங்களுக்குப் பிரமோஷன் *(***D.E.***)* வரும்' எனக் கேட்டார். தமக்கு மேல் உள்ள அடுத்த பதவி குறைவான எண்ணிக்கையிலும் சீனியர்கள் அதிகமாகவுமிருப்பதால் சுமார் *5*, 6 வருஷமாகும் என்றார். ஆறாவது மாதம் **D.E.** லீவில் போன பொழுது வழக்கமாக **incharge** போடுபவர்களை விட்டு இவருக்கு **incharge** போட்டார்கள். லீவு *15* நாள்வரை எனில் **acting** போடுவார்கள். அதற்கு மேல் எனில் வேறொரு **D.E.** யைப் போடுவார்கள். இவர் லீவு வேகன்சியில் 6 மாதமிருந்தார். மீண்டும் **A.E.**யாகி 3ஆம் மாதம் **D.E.** பிரமோஷன் வந்தது.

ஒருவருக்கு ஜாதகப்படி வரவேண்டிய நல்லது அவர் அன்னையை ஏற்றுக் கொண்டபின் குறிப்பிட்ட காலத்திற்கு முன் வருவது அன்பர் அனுபவம்.



அன்னையை ஏற்றுக் கொண்டு அவர் சக்தி நம் வாழ்வில் பொதுவாகச் செயல்படுவதை அனைவரும் அறிவர். சிறப்பாகச் செயல்படுவதை சில சமயங்களில் நாம் காண்கிறோம். சுத்தம் போன்றவை சக்தி செயல்பட உதவும். **கம்ப்யூட்டர் அன்னை சக்தியைச் செயல்படச் செய்யும்.**

சுத்தம், முறை, விரைவு ஆகியவை அன்னை சக்தியை ஈர்க்கும். கம்ப்யூட்டர் செய்திகளை விரைவாகத் தருவதால் இது அப்படிப்பட்ட கருவி. ஒரு கம்பெனியில் **computer**ஐ எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு பயன்படுத்தினால், அதனால் கம்பெனி விரைவாக வளரும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி பின் தங்கிய நாடுகளில் அதிகமாகவும், மேலை நாடுகளில் குறைவாகவுமிருக்கும். ஏற்கனவே அங்கு எல்லா வளர்ச்சிகளும் வந்துவிட்டதால், இனி வேகமாக வளர முடியாது.

அமெரிக்காவில் அந்த வளர்ச்சி ரேட் பின் தங்கிய நாடுகள் போல் சென்ற ஆண்டு உயர்ந்துள்ளது. அதிகபட்சம் கம்ப்யூட்டர் பயன்படுத்துவதால் ஏற்பட்ட மாற்றம். **Modern product** இக்காலத்து பொருள்களில் கம்ப்யூட்டர் அன்னை சக்தியைப் பெறும் கருவியாய் உலகெங்கும் செயல்பட்டு காலத்தைச் சுருக்குகிறது.

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

விழித்தெழுந்த சக்தியை ஜீவனின் எல்லாச் சிறு பகுதிகளும் தடையின்றி ஒளியை நோக்கிச் செல்ல அனுமதிப்பதை அகண்ட பெரு விழிப்பு என்கிறார் பகவான். சக்தி விழித்தெழுதல் ஜீவியமாகுதலாகும்.

*ஜீவனின் நிஷ்டையும், அகண்ட பெரு விழிப்பும்*

*யோகத்தின் இரு பெரும் அஸ்திவாரம்.*

“லைப் டிவைன் - கருத்து”

## P. 11.

- **கால் தரையில் பலமாக ஊன்றியிருக்க வேண்டும்**
- **பூமியே அஸ்திவாரம் - உபநிஷதம்**

தவமிருந்து மோட்சம் பெற்றாலும் அத்தவசிக்கும் உணவு வேண்டும். கௌபீனமானாலும் தவம் அதைத் தாராது. **Aldous Huxley** என்பவர் உலகப் பிரசித்தி பெற்ற எழுத்தாளர். அவர் குடும்பத்தாரில் ஒருவர் நோபல் பரிசு பெற்றவர். அவரும், அவர் உடன்பிறந்த இருவரும் பிரபலமானவர்கள். ஹக்ஸ்லி ஸ்ரீ அரவிந்தர் புத்தகங்களைப் படித்தவர். மேற்சொன்ன கருத்து அவரைக் கவர்ந்தது. தம் புத்தகத்திற்கு மேற்கோளாக எடுத்துக் கொண்டார்.

- நாட்டுக்கு விவசாயம் அஸ்திவாரம்.
- மனிதனுக்கு வாழ்வு அடிப்படை.
- எந்த ஆராய்ச்சிக்கும் பயன் முக்கியம், மக்களுக்குப் பயன்படாத ஆராய்ச்சிக்கு உயர்வு இருந்தாலும் உயிரில்லை.
- எழுத்தாளர், கலைஞர், அரசியல்வாதி ஆகியவர் லட்சியமாக இருந்தாலும் வருமானமே அடிப்படை.

செய்யும் காரியம் பெரியதா, சிறியதா என்பதை விட அவர் குடும்பம் வாழ வழி செய்திருக்கிறாரா என்பதே முக்கியம். யோகத்தை மேற்கொள்ள சாதகர்களை ஏற்குமுன் அன்னையின் ஸ்தாபனம் தரையில் காலை ஊன்றி வைத்ததை நாம் அறிவோம்.

- கல்லூரியில் படிக்கும் மாணவன் நடிப்பு, பேச்சு, எழுத்து, விளையாட்டுகளில் எவ்வளவு உயர்ந்தாலும் படிப்பும், பட்டமுமே அவனுக்கு அடிப்படை. அவையில்லாவிட்டால் மற்றவை எடுபடாது.
- **Inter-caste** வேறு ஜாதியில் திருமணம் செய்து கொள்வது 50 ஆண்டாக இலட்சியமாக இருக்கிறது. இதைச் செய்தவர்கள் பலர் நல்ல நிலையிலிருக்கிறார்கள். பலர் கெட்டுப் போய்விட்டனர். கெட்டழிந்தவர்கள் வேறு ஜாதியால் கெடவில்லை. அஸ்திவாரமான வருமானமில்லாமல் கெட்டுப் போனவர்கள்.



- 1947இல் பாகிஸ்தான் ஏற்பட்டபொழுது இந்தியாவின் மிகச் செழிப்பான பகுதிகளை பாகிஸ்தான் பெற்றது. 53 ஆண்டுகட்குப் பின் ‘வரவு - செலவு’ கணக்குப் பார்த்தால் பாகிஸ்தானில் உணவுப் பற்றாக்குறையுள்ளது. சர்வதேச அரங்கத்திலும், பாகிஸ்தான் மக்கள் மனதிலும் இந்தியாவுக்குள்ள கௌரவம் பாகிஸ்தானுக்கில்லை. பாகிஸ்தான் 1947இல் பெற்றது அரசியல் சுதந்திரம்.

**அரசியலுக்கு அடிப்படை மக்களாட்சி.**

**அடிப்படையில்லாததால் சுமார் 10 ராணுவப் புரட்சிகள் ஏற்பட்டன.**

- மனிதனுக்குக் குடும்பம் அடிப்படை. அவன் பல இலட்சிய வேலைகளைச் செய்யலாம். ஊதாரியாக இருக்கலாம். குடும்பத்தைப் புறக்கணிக்காதவனுக்கு கடைசி காலம் நல்ல-படியாக இருக்கும். குடும்பமே மனிதனுக்குக் காலூன்றும் இடம்.
- மேல்நாடுகள் செழிப்பானவை. மதவழிபாடு அதிகம். சர்ச்சுக்கு ஏராளமான சொத்து உள்ளது. ஆனால் வாழ்வுக்கு அடிப்படை சொத்தைவிட, படிப்பை விட, மத வழிபாட்டைவிட, ஆன்மீகமாகும். ஆன்மீகம் புறக்கணிக்கப்பட்டதால் இன்று ஏராளமான செல்வமிருந்தும், அவர்களால் சந்தோஷம் பெற முடியவில்லை.
- ஜப்பான் USAயிடம் போட்டியிட்டு உலகப் பொருளாதாரத்தில் முதன்மையாயிற்று, அமெரிக்காவுக்குப் புதிய கண்டு பிடிப்புகளில் முதலிடம் உண்டு. ஜப்பான் பிறநாட்டுக் கண்டுபிடிப்பைக் காப்பி அடித்தது. ஏராளமான பணம் குவிந்தது. ஆனால் நாட்டில் இன்று ‘நிலை’யில்லை. ஏனெனில் அவர்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஆராய்ச்சியைப் பிறரிடமிருந்து காப்பி அடித்தனர். சொந்தக் காலே சுகம் தரும். ஜப்பானுக்குச் சொந்தக் காலில்லை.

❊ ❊ ❊

## மாமனாக வந்தவர்

இல. சுந்தரி

அமைதியான காலைப் பொழுது. வசந்தி வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருக்கிறாள். அப்பா செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறார். அம்மா இவர்களுக்கு டிபன் தயாரிக்கிறாள்.

பட்டுப்பாவாடை சரசரக்க, பூமணம் கமழ புத்தம் புதுமலராய் பார்வதி வருகிறாள். அதே தெருவில் வசிப்பவள். வசந்தியின் தோழி. வெள்ளிக் கிண்ணத்தில் ஏதோ கொண்டு வந்திருக்கிறாள். ஒரு கணம் வீட்டின் அமைதி தடுமாறி சூழல் ஆரவாரத்திற்கு வருகிறது. ‘வா! பார்வதி எங்கே உன்னைக் காணவில்லை’ என்கிறாள் அம்மா வரவேற்கும் தோரணையில். அப்பாவோ, ஏது பட்டுப் பாவாடையெல்லாம் அமர்க்களப்படுகிறது? என்ன விசேஷம்? என்கிறார். இப்படித்தான் பார்வதி திடீர் திடீரென ஏதேனும் காரணத்துடன் ஆரவாரமாய் வரும்போதெல்லாம், வசந்தி ஏக்கமும், மகிழ்வுமாய் மாறுவாள். ‘இன்று எனக்குப் பிறந்த நாள் மாமி. நில்லுங்கோ நமஸ்காரம் பண்ணிக்கிறேன். ஆசீர்வாதம் செய்யுங்கோ’ என்று நமஸ்கரிக்கிறாள். வெள்ளிக் கிண்ணத்தில் பால் பாயசத்தை நீட்டும்போது அவள் பட்டுப் போன்ற கைகளில் புதிய பொன் வளையல்கள் மின்னுவதை அம்மா ஆர்வத்துடன் பார்க்கிறாள். வசந்தி எழுந்து வந்து அம்மாவின் பக்கத்தில் நின்று தோழியின் கைவளையல்களை ஏக்கத்துடன் பார்க்கிறாள். என்ன மாமி அப்படிப் பார்க்கறேள்? இது எங்க மாமா வாங்கித் தந்தது. என் பொறந்த நாள் பரிசு என்று ஏகப் பெருமையுடன் கூறினாள்.

ரொம்ப நன்னாயிருக்கு. நீயும் நன்னாப் படிச்சு நன்னாயிருக்கணும், என்று அம்மா நெஞ்சு நிறைந்து ஆசீர்வதித்தாள். அம்மா இப்படித்தான் கண்டு மகிழ்வதோடு சரி. வேண்டும் என்று ஆசைப்படாத உள்ளம். அதனால்தான் அப்பா



மற்ற ஆடவர்களைப்போல் கவலைப்படாது வலம் வருகிறார். வசந்தியின் பிஞ்சு மனமோ தனக்கும் அப்படியொரு பொன்வளையல் வேண்டுமென ஆசைப்பட்டது. வளையல் வேண்டுமென்பதை விட நிறைந்த அன்புள்ளம் கொண்ட ஒரு தாய் மாமன் வந்து அதைத் தரவேண்டுமென ஆசைப்பட்டது. எத்தனையோ உறவினர் வந்திருக்கிறார்கள். இவளுக்குத் தாய் மாமன் என்று ஒருவரும் வந்ததில்லை.

ஆசியைப் பெற்றுக் கொண்டு பார்வதி போய்விட்டாள். அவள் விட்டுச் சென்ற நிகழ்ச்சி நிலைத்துவிட்டது. அம்மா வசந்தியை ஆதரவாகப் பார்த்தாள். அம்மா, எனக்கு ஏன் அம்மா மாமா இல்லை? என்று ஏக்கத்துடன் கேட்டாள். இவள் இப்படிக் கேட்கும் போதெல்லாம் அம்மா கண் கலங்குவாள். அப்பாவோ (பெரிய மனுஷி போல் இதென்ன பெரிய பேச்சு? என்று) அவளை அடக்குவார். இப்படி நல்ல நாட்களெல்லாம் பரிசு கொடுக்கும் மாமா எனக்கு மட்டும் ஏனில்லை? அம்மா எனக்கும் ஒரு மாமாயிருந்தால் எவ்வளவு நன்னாயிருக்கும்? என்றாள். பரிசெல்லாம் தருவாரில்லையா? என்று தன் ஏக்கத்தைச் சொல்லிலும் முகத்திலும் வெளிப்படுத்தினாள். ‘தப்பு வசந்தி. அப்படிச் சொல்லாதே. நமக்கு வேண்டியதை மாமாவால்தான் தரமுடியுமா? ஸ்வாமிதான் எல்லாம் தருபவர். எது கேட்டாலும் தருவார். அவரைத்தான் நாம் கேட்க வேண்டும்’ என்று நயமாகவும், ஆறுதலாகவும் கூறினாள்.

மாலை மறையும் நேரம். வாசல் திண்ணையிலமர்ந்து தெருவில் போவோர் வருவோர் முகங்களில் மாமாவின் அன்பைத் தேடிக்கொண்டிருந்தாள். பள்ளிக்கூடம், விளையாட்டு, சாப்பாடு, தூக்கம் இவற்றைத் தவிர வேறு அறியாத சிறு பருவம். அன்பு எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் கள்ளமிலாத பிள்ளைப் பருவம். இதைத் தவிர சூதும் வாதும் கலவாத தூய்மையான வெள்ளையுள்ளம். அடிக்கடி பார்வதி தன் தாய் மாமாவைப் பற்றிக் கூறக் கேட்டு மாமன் என்பவர் பெண்ணுக்கு இன்றியமையாத அன்பர் என்று எண்ணியிருந்தாள். திடீரென என் மாமன் வந்து என்னைக்

காணக் கூடுமோ? என்று எண்ணியவண்ணமிருந்தாள். மின்னல் வேகத்தில் எதிர்ச்சாரி வீட்டிலிருந்து ஒருவர் வெளியேறி முன் சென்றதைக் கண்டாள். கண்களில் கனிவும், முகத்தில் தீவிரமுமாக இப்படியொரு மனிதரை அவள் பார்த்ததேயில்லை. யாரிவர்? எங்கு செல்கிறார்? நீண்ட நேரம் காத்திருந்து விடையறியாது விழித்தாள். சிறிது நேரத்தில் ஆபீஸ் முடிந்து அப்பா வந்தார். வாசல் திண்ணையில் மகளைக் கண்டதும், விளக்கேற்றும் வேளையில் ஏன் வாசலில் உட்கார்ந்திருக்கிறாய்? உள்ளே போய் சுவாமிக்கு விளக்கேற்றி ஸ்தோத்திரம் சொல் என்றார். இப்படியொரு வழக்கம் இந்த வீட்டில். இதில் ஓர் அழகு இருப்பது உண்மைதான். அதன் சாரம் என்ன என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை. அகண்ட பராசக்தியை வார்த்தைகளால் வர்ணிக்கும் செயல்மட்டுமே அது. சுவாமிக்கு நமஸ்காரம் செய்தாயோ? என்றாள் அம்மா. ஏனோ இவர்கள் சுவாமி, சுவாமி என்று கூறும்போதெல்லாம் எதிர்வரிசையிலுள்ள ஒரு வீட்டிலிருந்து மின்னலாக வெளியேறிய அந்தத் திருவுருவம், அந்தக் கண்களில் கனிவு மனத்திரையில் ஓடி மகிழ்வூட்டுகிறது. பெற்றோரின் மகிழ்வுக்கு அவர்கள் கூறிய இந்த வழிபாட்டை மேற்கொண்ட போதிலும் மனம் ஏனோ அதில் ஈடுபடவில்லை. உண்மையில் இவளுக்குக் கடவுள் பக்தி அதிகம். ஏனோ மனம் புரட்சி செய்கிறது.

அங்கே இங்கே கேட்ட பேச்சுகள் இவளால் காணப்பட்டவர், எல்லோருடைய கவனத்திற்கும் உரியவராய் இருந்தார். இதில் வேறுபாடு என்னவெனில் இவள் கள்ளமிலா மனம் கண்டவிதமும், மற்றவர் காணும் கோணமும் மாறுபட்டிருந்தன. அவர் ஏதோ மாயமந்திரம் செய்பவர் என்றே எல்லோரும் எண்ணியிருந்தனர். அதை மேலும் கேட்டறிய போதிய வயதில்லை இவளுக்கு. அவள் தந்தையோ, வீட்டில் பிரதியட்சமாய், பரம்பரை பரம்பரையாய் வழிபடும் தெய்வங்கள் வீட்டிலிருக்க யோகி என்றொரு மந்திரவாதியைத் தேடுகிறாளா? என்பார். அவர் ஏதோ கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை கற்றவராம். இன்னும் ஏதேதோ புரளிப் பேச்சுகள். அவள் குழந்தை



மனம் இவையெவற்றையும் ஏற்கவில்லை. அவர் திருவுருவம் இவள் மனதில் ஆழப் பதிந்தது. நினைக்கவே மகிழ்ச்சியாயிருந்தது. அந்தப் பார்வை எத்தனைக் கனிவானது? எடுத்துச் சொல்லத் தெரியவில்லை. ஏதேனும் சொல்லிவிட்டாலோ அவளை வெளியே வாராது தடுத்துவிடுவார் அப்பா. வேறு வீடு குடி மாறவும் செய்யக்கூடும். எனவே தன் மனநிலையை யாரிடமும் கூறவில்லை.

அவர் யார்? ‘கடவுளை நேரில் பார்க்க முடியுமா அம்மா?’ என்று அவள் கேட்டபோதெல்லாம் பார்க்கமுடியும். அதற்குக் கடவுளைப் பார்க்க வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் வேண்டும் என்பாள் அம்மா. இவளுக்கு இப்போது உண்மையான ஆர்வம் உள்ளது.

அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே போகும் போதெல்லாம் எத்தனை ஆவலாக அந்த வீட்டைக் கண்காணித்தாள். ஒரு நாள் அவள் எதிர்பார்த்தது நிகழ்ந்தது. அந்த வீட்டின் மாடியறையில் வாசல்புறம் நோக்கிய ஜன்னல் வழியே அதே திருவுரு தன்னைக் கண்டதை அவளும் கண்டாள். கண்ட கணமே மெல்ல உதடு பிரித்து முறுவல் செய்தாள். அவரும் கண் மலர்ந்து புன்னகைத்து நோக்கினார். ஆகா இது என்ன அற்புதமோ, திருவருளோ என்று சொல்லத் தெரியாத பருவம். மனம் எப்படி நெகிழ்ந்து போனது. ஒரே குதூகலம். வானத்தில் பறப்பதுபோல் பெருமிதம். அன்று முதல் ஏன் அந்தக் கணம் முதல் வீடு, பள்ளிக்கூடம், விளையாட்டு, தோழியர், ஆடை, அணிகலன் யாவற்றையும் விட இவள் மனம் அந்தப் புன்னகையைத்தான் நேசித்தது.

தெருக்கோடியில் உள்ள கடையில் அப்பாவோ, அம்மாவோ ஏதேனும் வாங்கி வரச் சொன்னால் மிகுந்த ஆவலோடு புறப்பட்டுவிடுவாள். மறுப்பதோ, சிணுங்குவதோ கிடையாது. அதன் பயன் அவளுக்கல்லவா தெரியும். ஜன்னல் வழியே அந்தத் திருவுருவம் தெரிகிறதா எனப் பார்த்துக் கொண்டே செல்வாள். தரிசனம் கிடைத்தபோதெல்லாம் வானிலே பறப்பாள். காணாத போதோ

சோகத்தோடு வருவாள். ஆயினும் இந்த இன்பத்தையோ, ஏமாற்றத்தையோ வெளிப்படுத்தாமல் மறைத்துவிடுவாள். அவரைப் பார்க்க வேண்டும், அவருடன் பேசவேண்டும் என்றெல்லாம் நாளுக்கு நாள் அன்பு வளர்ந்தது. இவள் அகவுணர்ச்சி அத்தெய்வத்திற்கு எட்டாதிருக்குமா?

ஒரு நாள் பக்கத்து ஊரில் அவர்கள் உறவினர் வீட்டிற்கு ஏதோ காரணமாய் இவள் பெற்றோர் செல்ல நேர்ந்தது. இவளை விட்டுவிட்டுச் சென்றனர். அப்போது இவள் விளையாட்டுத் தோழன் வாசு ஒரு வண்ணப்பட்டத்துடன் வந்தான். வசந்தி நீயும் வருகிறாயா? பட்டம் விடுவோம்? என்று ஆவலாக அழைத்தான். அவளும் மகிழ்ச்சியுடன் பட்டம்விட ஒப்புக்கொண்டாள். இருவரும் மாறிமாறி நூலைப் பிடித்து பட்டத்தை மேலே ஏற்றினர். அது மேலே ஏறுவதும் கவிழ்வதுமாய்ப் பறந்தது. இருவரும் ஆரவாரத்தோடு சிரித்து மகிழ்ந்து மேலே மேலே பட்டத்தை ஏற்ற முயன்றனர். அப்போது பட்டம் திடீரென எதிர் வரிசையிலுள்ள அவர் (இவள் காண விரும்பும் கடவுள்) வீட்டு மேல்மாடியில் ஓரிடத்தில் சிக்கிக் கொண்டது. வாசு திடுக்கிட்டான். எத்தனை ஆசையாய் வாங்கி வந்த பட்டம். இப்பொழுது என்ன செய்வது என்று கலங்கிப் போனான். வசந்தியோ திடீரென மகிழ்ச்சியானாள். ஏன் வசந்தி இத்தனை மகிழ்ச்சியாயிருக்கிறாய்? பட்டம் சிக்கிவிட்டதே என்று எனக்கு எத்தனை வருத்தம் தெரியுமா? என்று தன் வேதனையை வெளிப்படுத்தினான். இதிலென்ன வருத்தம் உனக்கு? எதிர்வீட்டுக் காரர்கள் ஊருக்கே புதியவர்கள். அவர்களைப் போலீசே கண்காணித்து வருகிறது என்று என் அப்பா சொல்லியிருக்கிறார். அவர்கள் வீட்டில் உள்ளே சென்று எப்படிக் கேட்க முடியும்? அவர்களோ மந்திரவாதிகளாம் என்றான் அச்சத்துடன். வசந்திக்குச் சிரிப்பு வந்தது. அந்தக் கனிவான முகத்தைப், பாசம் பொழியும் விழிகளை ஒருமுறை பார்த்தவர் கடவுளையே பார்த்த மாதிரியல்லவா இருக்கும். அவர்கள் புதியவர்களானால் நமக்கென்ன? நமக்குத் தேவை நம் பட்டம். அதைக் கேட்டுப் பெற நாம் ஏன் அஞ்ச



வேண்டும்? என்றாள். அப்படியென்றால் நீ போய் பட்டத்தை எடுத்து வா. அந்த வீட்டிற்குள் நான் வரமாட்டேன் என்றான் வாசு. ‘சரி! நானே போய் எடுத்து வருகிறேன். ஆனால் நீ யாரிடமும் சொல்லக் கூடாது’ என்றாள். அவனுக்குத் தேவை அவன் பட்டம். அவளுக்குத் தேவை அவள் தெய்வத்தின் தரிசனம். ‘இங்கேயே நில்’ என்று சொல்லிவிட்டு அந்த வீட்டை நோக்கி ஓடினாள். திறந்தும், திறவாமலும் இருந்த கதவை மெல்லத் தள்ளி உள்ளே சென்றாள். ஆள் அரவமே இல்லாதிருந்தது. இரண்டடி முன்னே சென்றாள். ஒரு மாடிப்படி. அதன் மீதேறி மெல்லச் சென்றாள். ஒரு வராந்தா. அதையொட்டி ஓரறையிருந்தது. வீட்டின் கூடத்தை நோக்கினாற்போல் வாசல். தாழ்வாரத்தை நோக்கினாற்போல் அந்த அறையின் ஜன்னல் அமைந்திருந்தது. அதனருகே சென்றாள். ஜன்னல் கம்பிகளைப் பிடித்த வண்ணம் உள்ளே பார்க்கிறாள். ஜன்னலையொட்டி ஒரு மேசையும் நாற்காலியும். அங்கு அமர்ந்து அவர் ஏதோ படித்த வண்ணமிருந்தார். நீண்டு தோளில் விழும் கேசம், சிறிய தாடி, நீண்ட விழிகள். அந்தத் தோற்றம் அவளுக்குள் ஒரு பரவசத்தையேற்படுத்தியது. வைத்த கண் வாங்காமல் நோக்கினாள். ஏதோவுணர்வு தீண்டினாற்போல் அவர் இவள் பக்கமாகத் திரும்பினார். கள்ளமிலாச் சிறுமி. தன் பெரிய விழிகளால் தன்னை ஆவலும் வியப்புமாய்ப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டார். நட்புணர்வுடன் மெல்லச் சிரித்தார். அவளும் வெட்கமாய்ச் சிரித்தாள். அடுத்தவர் வீட்டிற்குள் அனுமதி பெறாமல் வந்தது பற்றித்தான் வெட்கப்பட்டாள். அவர் இவளை நீ யார் எங்கு வந்தாய் என்பது போல் பாராமல் நன்கறிந்தவர்களை எப்பொழுது வந்தாய் என்று கேட்பதுபோல் பார்த்தார். மிகவும் மகிழ்ச்சியவளுக்கு. தங்கள் விளையாட்டுப் பட்டம் அந்த வீட்டு மொட்டை மாடியில் சிக்கிவிட்டது, எடுத்துப் போக வந்ததாயும் கூறினாள். தலையசைத்து எடுத்துக்கொள்ள அனுமதி தந்தார். ஓடிப் போய் பட்டத்தை எடுத்து வந்துவிட்டாள். மீண்டும் ஜன்னல்பக்கம் வந்து தன் சின்னப் பாதங்களை உயர்த்தி உள்ளே ஆவல் மீதூரப் பார்த்தாள். அவர் மெல்லச் சிரித்து இவளை உள்ளே வரும்படிச் சொன்னார். பூனை

போல் மெல்ல அடிமேல் அடிவைத்து உள்ளே வந்தவள் இடக்கையில் பட்டத்தைப் பிடித்த வண்ணம் அவர் மேசையின் பக்கமாக வந்து நின்றாள். மேசை நிறையப் புத்தகங்கள். அழகான எழுத்துகளால் வெள்ளைத் தாளை அலங்கரிப்பதுபோல் எழுதிக் கொண்டிருந்தார். எழுதுவதை நிறுத்தி இவளைப் பார்க்கிறார்.

'உன் பெயரென்ன?' புன்னகையுடன் கேட்கிறார்.

'வசந்தி' என்று அழகாகச் சொல்கிறாள்.

'அழகான பெயர். வசந்தம் இங்கே வந்திருக்கிறதா?' என்றார் சிரித்துக் கொண்டே.

'உங்கள் பெயர் என்ன?' பதிலுக்கு அவளும் கேட்டாள்.

'அரவிந்த கோஷ்' என்று சங்கீதம் பொழிவதுபோல் கூறினார்.

'எத்தனை அழகான பெயர். என் பெயரை விடவும், உங்கள் பெயர்தான் அழகாக இருக்கிறது. எனக்கு ரொம்பப் பிடிக்கிறது' என்றாள் உண்மையான அன்புடன்.

'ஓகோ, என் பெயரைத்தான் பிடிக்கிறதா? என்னைப் பிடிக்கவில்லையா?' என்றார் விளையாட்டாக.

'உங்களையும்தான் ரொம்பப் பிடித்திருக்கிறது' என்று அவசரமாகப் பதிலிறுக்கிறாள்.

'நேரமாகிவிட்டது. அப்பா வந்துவிடுவார்.'

'அப்புறமாய் வருகிறேன்' என்றாள்.

'ஏன் அப்பாவிடம் மிகவும் பயமா?' என்றார்.

'பயம் ஒன்றுமில்லை. ஆனால், உங்கள் வீட்டிற்கு வந்தால் பிடிக்காது' என்றாள்.

'ஏன் பிடிக்காது?'



'ஏதோ இங்கு மந்திரவாதி இருப்பதாக எல்லோரும் சொல்வார்களாம். அதனால் இந்த வீட்டிற்குள் போய்விடாதே என்பார் அப்பா.'

'அப்படியா? யார் அந்த மந்திரவாதி?'

'நீங்கள்தான்' என்று குறும்பாய்ச் சிரித்தாள் குழந்தை.

'நானா?' என்று அஞ்சுவதுபோல் கேட்டார்.

'ஆமாம். நீங்கள்தான். ஆனால் அப்பா சொல்வதுபோன்ற மந்திரவாதியில்லை. ஆண்டவன்போன்ற மந்திரவாதி.

'ஆண்டவன்போல என்றால் என்ன பொருள்?'

'கடவுளுக்குத் தானே மந்திரங்கள் ஜபிப்பார்கள்'.

'மந்திரமெல்லாம் ஜபிப்பதுண்டா?'

'அதையேன் கேட்கிறீர்கள். காலையிலும், மாலையிலும் விளக்கேற்று, சுவாமிக்கு ஸ்லோகம் சொல்லு என்பார் அப்பா. அவருக்காகத்தான் ஸ்லோகமெல்லாம் சொல்வேன். ஆனால் மனதில் எதுவும் தோன்றுவதில்லை. ஆனால் ஒரு மந்திரமும் சொல்லாமல் உங்களைப் பார்த்தவுடன் பக்தி வருகிறதே. அதனால் நீங்கள்தான் எனக்கு மந்திரவாதி' கள்ளங்கபடமில்லாமல் சொல்லிவிட்டாள். இவள் பேசப் பேச அவர் ரசித்த வண்ணமிருந்தார்.

'அது சரி. நான் உங்களை என்ன சொல்லி அழைப்பது?'

'மாமா என்று சொல்லிக் கூப்பிடேன்'.

'கடவுளை மாமா என்று கூடச் சொல்லலாமா?

'சரிதான். இவ்வளவு கெட்டிக்காரியாய் இருக்கிறாய்.'

'கடவுள் மாமனாக வந்து வழக்குரைத்த கதை தெரியாதா?'

'தெரியாதே'.

‘ஓர் ஊரில் தனபதி என்று ஒருவர் இருந்தார். அவருக்குக் குழந்தையே இல்லை. அதனால் தன் தங்கையின் குழந்தையை சுவீகாரம் செய்து கொண்டு வளர்த்தார். ஆனால் அவர் மனைவிக்கும், தங்கைக்கும் ஓயாமல் சண்டை வந்து கொண்டேயிருந்தது. அதனால் தனபதி தன் தங்கையின் மகனுக்குச் சொத்துகளை எழுதிவைத்துவிட்டுத் தம் மனைவியுடன் வனவாசம் சென்றுவிட்டார். இவர் தங்கைக்கு ஒன்றும் தெரியாததால் உறவினர்கள் இவளை ஏமாற்றி பொருளையெல்லாம் பறித்துக் கொண்டனர். இவள் கடவுளிடம் சொல்லி அழுதாள். கடவுள் இவனிடம், வழக்குமன்றத்தில் போய் முறையிடும்படியும் தாமே வந்து சாட்சி சொல்வதாயும் கூறினார். அதுபோலவே வழக்குமன்றத்தில் குழந்தையின் தாய்மாமனாய் வந்து தாமே சொத்துகளை மீட்டுத் தந்தாராம்’ என்றார்.

அவர் சொல்லச் சொல்ல ஆவலுடன் அவர் முகத்தையே அன்பு பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். ‘நீங்கள் மாமாவாக வந்து சாட்சி சொல்லியிருக்கிறீர்களா?’ என்று சிரித்தாள்.

’எப்போதும் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?’ பெரிய மனுஷி போல் கேட்டாள்.

‘உன்னைப் பற்றித்தான் எழுதிக் கொண்டிருக்கிறேன்’ என்றார்.

‘என்னைப் பற்றி தெரியுமா உங்களுக்கு?’

‘எல்லாரைப் பற்றியும் தெரியும்’ என்றார்.

‘அப்படியென்றால் எனக்கு மாமா இருக்கிறாரா?’

‘அவர் என்றேனும் பார்வதி மாமாவைப்போல் எனக்குப் பரிசு கொண்டு வருவாரா?’ என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள்.

‘ஆமாம். நிச்சயம் கொண்டு வருவார்’ என்றார்.

அவர் கூறும்போது அவர் முகத்தில் தெரிந்த பரிவுணர்ச்சி உறுதி யாவும் இவளுக்கு மகிழ்வளித்தது.



‘நேரமாகிறது பிறகு வருகிறேன்’ என்று மாமாவைப் பற்றிய மனநிறைவோடு சென்றுவிட்டாள்.

இவள் பட்டத்துடன் வருவது கண்டு நிம்மதியடைந்தான் வாசு. ஏன் வசந்தி இவ்வளவு நேரம்? நான் பயந்தே போனேன் என்றான்.

‘எதற்குப் பயந்தாய், அங்கொன்றும் மந்திரவாதியில்லை’ என்றாள் கோபமாக.

அப்பா இவளைத் தேடிக்கொண்டிருந்தார். எங்கே வசந்தி? விளக்கேற்றவில்லையா? சுவாமிக்கு விளக்கேற்றி ஸ்தோத்திரம் சொல்ல வேண்டுமென்று எத்தனை முறை சொல்வது? என்று சினந்தார்.

குழந்தை கைகால் அலம்பி முகம் கழுவி, நெற்றிக்கு குங்குமம் இட்டுக் கொண்டு வந்தாள். அம்மா விளக்கில் எண்ணெய் ஊற்றித் தர தன் பிஞ்சுக் கரத்தால் விளக்கேற்றினாள். சுவாமி படத்திற்கு முன்னின்று ஸ்தோத்திரம் பாடினாள். வாய்தான் பாடியது. மனம் சற்றுமுன் கண்ட பரம்பொருள் அவள் களங்கமற்ற கண்களுக்குத் தெரிந்தது.

பள்ளிக்கூடம் விட்டு மதியவுணவிற்குப் பின், அப்பா இல்லாத நேரம், அம்மா கண்ணயரும் நேரம் மாமாவுடன்தான் இவள் வாசம்.

அன்று வார விடுமுறை நாள். அப்பா எங்கும் வெளியே போகமாட்டார். இவள் எண்ணெய் நீராடிவிட்டு வீட்டிற்குள்ளே இருக்கவேண்டும். அன்று திடீரென்று ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் இவள் அம்மாவும், அப்பாவும் யாரெனத் தெரியாமல் விழித்தனர். வந்தவர் உரிமையோடு கூடத்து ஊஞ்சலில் வந்தமர்ந்தார். யோகியைப்போல் முகத்தில் ஒரு தேஜஸ், வெட்டப்படாத முடியும், தாடியுமாய் இருந்தார். இவள் கண்களுக்கு எதிர்வீட்டு மாமாவைப்போலவே தோன்றிற்று. மாமா! என்று ஆவல் மேலிட ஓடிச் செல்லத் தொடங்கியவளை அப்பா தடுத்துப் பிடித்துக் கொண்டார்.

‘தாங்கள் யாரென்று தெரியவில்லை’ என்று அப்பா தயக்கமாய் விசாரித்தார். வந்தவர் சிரித்தார். இவள் அம்மாவைப் பார்த்து, ‘பர்வதம் உனக்குக் கூட என்னை அடையாளம் தெரியவில்லையா? நான் உன் அண்ணா ஈஸ்வரன்’ என்றார்.

இதுவரை இப்படி தனக்கொரு அண்ணாயிருப்பதாக அம்மா சொன்னதில்லையே என்று சிறுமி சிந்தித்தாள். அம்மாவோ கண் கலங்கினாள். விரைந்து சென்று நமஸ்கரித்தாள். ‘குழந்தை இங்கே வா. நான் யாரோ இல்லை. உன் தாய் மாமன்’ என்றார் அன்பு பொங்க. எதிர்வீட்டு மாமா சொன்னாரே நிச்சயம் வருவார் என்று. அவருக்கு எப்படித் தெரியும். அவர்தான் இவரோ. என்னவெல்லாமோ நினைத்தாள். அருகே சென்ற இவளின் வாழைக் குருத்துப்போன்ற கையை மிருதுவாகப் பற்றிச் செல்லமாக முத்தமிட்டார். மாமா உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் என்று அன்போடு அணைத்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். அம்மா தன் அண்ணாவைச் சாப்பிட வருமாறு அழைத்தாள். ‘இல்லையம்மா. நான் சாப்பிட வரவில்லை. சிறு வயதில் வீட்டை விட்டு வெளியேறிய நான் அலைந்து திரிந்து பணத்தாசையால் குடும்பப் பொறுப்பை மறந்தேன். உன் கல்யாணத்திற்குத் தமையனாக இருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறினேன். உன் பொருட்டு செய்யத் தவறிய கடமையை உன் மகள் பொருட்டுச் செய்ய வந்தேன்’ என்றார். ‘அதைப் பற்றி இப்பொழுது என்ன கவலை? நீங்கள் வந்ததே போதும்’ என்றாள் அம்மா.

‘இல்லை பர்வதம். இந்த ஒரு கடமையைச் செய்யாது போனது என் மன அமைதியைக் கெடுப்பதால் முழுமனத்தோடு இறைவனை எண்ண இடையூறாய் இருக்கிறது. இந்தக் கடமையை ஏற்று என்னை விடுதலை செய்துவிடு’ என்றார் மாமா.

என்ன அண்ணா இது? நீண்ட நாள் கழித்து வந்திருக்கிறீர்கள். எங்கிருக்கிறீர்கள்? எப்படியிருக்கிறீர்கள் என்றெல்லாம் கூறாமல் புறப்படுகிறீர்களே என்கிறாள் அம்மா.



‘இல்லை பர்வதம். எங்கே? எப்படி என்ற கேள்விகளுக்கெல்லாம் என் சந்நியாச வாழ்வில் இடமில்லை. கடமையைச் செய்யாது போனால் எந்தத் தவமும் பலிக்காது என்பதால் உனக்காக நான் சேமித்தவற்றைப் பெற்றுக் கொள்’ என்று ஒரு பணமுடிப்பை அம்மாவிடம் தந்தார். ஒரு காகிதப் பொட்டலத்தைப் பிரித்தார். அதில் ஒரு ஜோடி பொன் வளையல்கள் சிறியதாய் அழகாக மின்னின. இவள் கைகளை அன்புடன் பற்றி அதில் அந்தப் பொன்வளையல்களை அணிவித்து அந்த சின்னஞ்சிறு கைகளை முத்தமிட்டு வாழ்த்தி விடுவிடென்று தெருவில் இறங்கி காணாமற் போனார்.

கணப்பொழுதில் நிகழ்ந்த இச்செயல்களால் அனைவரும் ஸ்தம்பித்து நிற்க, தன் பொன்வளையல் பூண்ட கரங்களை எதிர்வீட்டு மாமாவிற்குக் காட்டிவர ஆவலுடன் ஓடிய வசந்தி கதவு பூட்டிக் கிடப்பது கண்டு திரும்பினாள்.

ஆம். மாமனாக வந்து வழக்குரைத்த கதை சொல்லத்தான் வந்தாரா? அம்மா சொல்வாளே, கேட்டதைத் தர மாமா வேண்டாம் சுவாமி தருவார் என்று. மாமா, நீங்கள் மாமா இல்லை. இவர்களுக்குத் தெரியாது நீங்கள் யாரென்று. எனக்குத் தெரியும். பொன்வளையலைக் கேட்டு உங்களை இழந்துவிட்டேனே மாமா. எனக்குப் பரிசு வேண்டாம். நீங்கள்தான் வேண்டும் என்று அழத் தொடங்கிவிட்டாள். அவர்களுக்குப் புரியவில்லை. அவள் மீண்டும் தன் மாமாவைக் கண்டிருப்பாளா? நிச்சயம் கண்டிருப்பாள்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்முடைய குறைகளை மட்டும் திருத்திக் கொள்ள முன் வருபவர்களுக்கு பிறரால் குறையோ, தொந்தரவோ வராது.

*அகத்தூய்மை, புறச் சுதந்திரம் தரும்.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி – கதையில் பணத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளுண்டா?

அண்ணன் – பொதுவாக பணத்தின் குணங்கள் பல. பணத்தால் வருபவை பல, பணத்தை நாடுபவர் குணங்கள் சில. பொதுவாக வெளிப்படாத குணங்களைப் பணம் வெளிப்படுத்தும். இக்கதையில் அவற்றில் சில விவரமாக வருகின்றன. முக்கிய கருத்து அது இல்லை. கதையில் வெளிப்படுபவை,

- பணம் அனுபவம் தரும்.
- நெடுநாள் பணம் பெற்றவர்க்கு நிதானம் உண்டு.
- நயத்தக்க நாகரீகம் பல வழிகளில் வரும். நீண்ட நாள் செல்வம் ஒரு வழி.
- பணம் தன்னை மட்டும் உயர்வாகக் கருதும்.
- எல்லா வழிகளும் அடைபட்ட பின், பணம் வழியுண்டு பண்ணும்.
- எட்டாத பணம் வெறுப்பையும், அது எட்டியவுடன் வெறுப்பு விருப்பாக மாறுவதும் மனித இயல்பு.
- பணத்தையும் மீறி அழகு பெண்ணுள்ளத்தை நெகிழ வைக்கும்.
- மேல்நாட்டு நாகரீக உள்ளம், பணத்தைக் கடந்து செயல்படும் திறனுள்ளது.
- பணம் அவசியமானபொழுது அனைவரும் வெறுக்கும் குணத்தையும் மீறி மனம் பணத்தை நாடும், விரும்பி ஏற்கும்.



- அடிப்படை சுபாவம் பணத்திற்கும் கட்டுப்படாது.
- உயர்ந்த அன்பு பணத்தின் சட்டங்களை மீறிச் செயல்படும்.
- உயர்ந்த பண்பால் ஈர்க்கப்படும் பணம், நல்ல வழியில் சம்பாதித்ததாக இருக்கும்.
- தன்மானமுள்ளவருக்குப் பணமும் கண்ணுக்குத் தெரியாது.
- கர்வமான தன்மானம் பொதுவாகப் பணத்திற்கு எதிரி, உயர்ந்த தன்மானத்திற்குப் பணம் பணியும்.
- பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்ற பழமொழி உண்மை. **Character, self-respect, goodness** உயர்ந்த சுபாவம், தன்மானம், நல்லெண்ணம் இவற்றிற்கு விலக்கு. பண்பும் அக்கருத்திற்கு விலக்காக நடக்கும்.

உதாரணங்களை எடுத்துக் கூறினால் கதை அதிகமாக நீளும். இது போன்ற எழுத்தாளர்களுக்கு **life knowledge** வாழ்வின் ஞானம் உண்டு என்கிறார் அன்னை. உயர்ந்த அன்பு கர்வியிடம் மட்டும் காணப்படுகிறது. உயர்ந்த அன்பு செயல்படும்பொழுது கட்டுமீறிச் செயல்படும். பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்க அன்பால் முடியாது. அந்த அன்பு எழுந்த பின் மனம் எத்தனை நாளானாலும் தன்வயமிருக்காது. **உயர்ந்த அன்பு எந்த நல்லதைப் பெற்றாலும், இவ்வுலகில் உயர்ந்த அன்பைப் பெறுவதில்லை.** உயர்ந்த அன்பு வாழ்வில் வெளிப்படும்பொழுது பொதுவாக நிகழ்பவை - கீழே காணப்படுபவை - பல இக்கதையில் வருகின்றன.

- எவர் கண்ணிலும் அது அன்பாகப் படாது.

- வெறுப்புக்கு ஆளாகும்.
- அது பண்பாக மாறுமிடங்களில் வாழ்வு துரோகம் செய்யும்.
- அன்புக்கு ஜெயிக்கும் வலிமையில்லை. பணத்திற்குண்டு.
- அன்பும், பணமும் சேருமிடத்தில் பணம் தவறாது வெற்றியைப் பெற்றுத் தரும்.
- அன்பின் பலனாக எவர் எதைப் பெற்றாலும், பலனை மட்டும் கருதுவர். அன்பு கண்ணுக்குத் தெரியாது.
- அன்பு பொதுவாக, தவறாக வெளிப்படும். உயர்ந்த நேர்மையாக வெளிப்பட்டாலும் தவறாகவே பெறுபவர் கண்ணுக்குத் தெரியும்.
- பணம் தரும் வலிமை தவிர அன்புக்கு இவ்வுலகில் பாதுகாப்பேயில்லை.

தம்பி – ஸ்ரீ அரவிந்தர் எந்த உண்மையைப் பற்றிப் பேசினாலும் அதற்கெதிரானதும் உண்மை என்கிறாரே, அதற்கு இக்கதையில் உதாரணம் உண்டா?

அண்ணன் – நேரடியான உதாரணமில்லை. அத்துடன் கதைச் சுருக்கத்தில் அதை நான் சேர்க்கவில்லை.

‘ஒரே சட்டம் எதிரான சந்தர்ப்பங்களில் எதிரான பலன் தரும்’ என்று ஒரு சட்டம் நீ அறிந்ததாகும்.

குழந்தை அதிக முன்னேற்றமடைய வேண்டும் என்று ஏராளமாகச் சிறு வயதில் பாடம் கற்பித்தால், தொடர்ந்து முதல் ராங்க் வருவதும் உண்டு. பாடத்தில் கசப்பு ஏற்பட்டுப் படிப்பை விட்டுவிடுவதும் உண்டு. அந்தச் சட்டத்திற்கு இங்கு ஓர் உதாரணம் வருகிறது.



சமூகத்தில் மந்திரியாக இருப்பவர், செல்வர், செல்வாக்குள்ளவர் சாதாரண மக்கள் வாழ்வில் தலையிட்டால், சாதாரண மக்கள் அவர்களை மீறமாட்டார்கள், மீற முடியாது. மீறினால் மீறுபவர்கள் தரைமட்டமாக்கப்படுவார்கள். அது எதிராகவும் நடக்கும்.

கர்வியின் சித்தப்பா **Sir** பட்டம் பெற்றவர். அவர்கள் நாட்டில் மாமன் பெண்ணை மணப்பதில்லை. சித்தப்பா பெண்ணை மணப்பதுண்டு, சித்தப்பா பெருஞ்செல்வர். காலமாகிவிட்டார். சின்னம்மா, கர்வி தம் பெண்ணை மணக்க விரும்பினார். அந்தஸ்தில் தாழ்ந்த பெண்ணை மணக்க இருப்பதாகக் கேள்விப்பட்டார். அதிகக் கோபம் வந்தது. இரண்டாம் பெண் வீட்டிற்கு வந்து அதிகாரமாக, கோபமாக ‘நீ என் தமக்கை மகனை மணக்கக் கூடாது’ என்று சொல்கிறார். இந்த அந்தஸ்திலுள்ளவரை எளியவர் மீற முடியாது. ஆனால் இரண்டாம் பெண் தன்மானம் அதிகமானவள். நிலைமை வேறு. கர்வி இரண்டாம் பெண்ணை மணக்கும்படிக் கேட்டான். அவள் மறுத்துவிட்டாள். அதன் பிறகு கர்வியின் உண்மையைப் பெண் அறிகிறாள். அத்துடன் ஓடிப்போன பெண்ணை கர்வி காப்பாற்றுகிறான். எனினும் பெண் மனத்தை அவன் அறியவில்லை. தன் மீதுள்ள வெறுப்பு பெண்ணுக்கு மாறுமா என அவன் காத்திருக்கிறான்.

இரண்டாம் பெண் கர்வியினுடைய சின்னம்மாவின் வேண்டுகோளை மறுத்தவுடன், சின்னம்மா கர்வியிடம் போய் பெண் தலைக்கனமானவள், அவளை மணக்காதே எனக் கூறி நடந்த உரையாடலை விவரமாகக் கூறுகிறார். கர்விக்கு இதன் மூலம் பெண்ணின் மனம் தெரிய வருகிறது. தன்னை வெறுக்கவில்லை என அறிந்து நேரே பெண்ணை

வந்து பார்த்து தன் திருமணத்தை முடித்துக் கொள்கிறான்.

சின்னம்மா தடை செய்ய எடுத்த முயற்சி தடையை விலக்கி திருமணத்தைப் பூர்த்தி செய்கிறது. நேர் எதிர்மாறான பலனைத் தருகிறது.

நெடுநாளாக ரிக்ஷாவில் போனவர், கார் வாங்கினார். ரிக்ஷாக்காரன் அவரிடம், கார் வேண்டாங்க ஐயா. பெட்ரோல் செலவாகும். எப்பொழுது கூப்பிட்டாலும் நான் வருகிறேன். காரை விற்றுவிடுங்கள் என்றான். இதைக் கேட்பவனுக்கு என்ன புத்தியிருக்கும்? நாம் இவனை மடையன் என்பதா? என்னென்பது? பெரிய உத்தியோகஸ்தர். அவர் மகன் IAS பாஸ் செய்து வேலையிலிருக்கிறான். தாம் முன்னேறுவதைவிட அடுத்தவர் முன்னேற்றத்தைத் தடை செய்வதில் அக்கறை கொண்ட உள்ளமுடையவர். அன்னை மையம் வந்தார். எதற்கும் உதவாத உறவினர் பையனை அங்கு கண்டார். அவனுக்குப் பிரார்த்தனையால் IAS பாஸாயிற்று. இவர் மனம் பொறுக்கவில்லை, எப்படியாவது இவன் IASஐ விட வேண்டுமென நினைத்தார். "IASஇல் என்ன இருக்கிறது. அதில் சேராதே" என அறிவுரை கூறினார். தம் அந்தஸ்தைப் பயன்படுத்தி எதிரியைக் கெடுக்கவிரும்பினார். அவர் பேசிய இடம் அன்னை மையம். அன்னைச் சூழல் உள்ள இடம்.

இவருடைய மகன் IASயை விட்டு வெளியேறினான்.

இவர் மனம் விரும்பியதற்கு எதிரான பலனை அன்னைச் சூழல் தரவல்லது என்று இவர் அறியார். பிறர் வாழ்வு மலர்வதில் பெருமிதம் கொள்பவரே அன்பராவார். இவர் அன்னை அன்பராக முடியாது. இவர் உறவினர் பையனை 'வாழ்த்திய' பொழுது அவனுக்கு செலக்ஷன் ஆகியிருந்தாலும் போஸ்ட்டிங்



வர அதிகத் தாமதமானால் போஸ்டிங் வாராமல் போய்விடுமோ என அவன் பயந்து கொண்டிருந்த நேரத்தில் இந்தச் செய்தியை பையன் மையத்தில் வந்து சொன்னான். சொல்லிய 3ஆம் நாள் பையனுக்குப் போஸ்ட்டிங் வந்தது. அவருடைய மனம் கீழ்த்தரமானது. எவரும் வெட்கப்படும் எண்ணங்களை விருப்பமாகப் பேசுகிறார். அன்னையிடம் பலன் என்ன? தாமதமான போஸ்ட்டிங் வந்துவிட்டது.

தம்பி - மேலும் விளக்கினால் நல்லது.

அண்ணன் - நான் கூறப்போகும் சட்டம் வினோதமாகத் தோன்றும். அன்பர்கட்கு இது அடிப்படையான சட்டம்.

**வாழ்வில் தவறு என்பது இல்லை. அன்னைச் சூழலில் தவறு என நாம் கருதுவதும் திருவுருமாறும். நல்லது மட்டுமே நடக்கும். கேவலமான கயவர்களாலும் அன்பர்கட்கு நல்லது மட்டுமே செய்யமுடியும்.**

தம்பி - விரிவான விளக்கம் தேவை.

அண்ணன் - அருள் பையனுடைய தாமதமாகும் ஆர்டரை விரைவுபடுத்த விரும்புகிறது. அவன் மனதில் ஆழ்ந்திருப்பவர்கள் அவன் உறவினர்கள். (அவன் உறவில் நல்லெண்ணமுள்ளவரிருந்தால் அவர்கள் மூலம் அருள் செயல்பட முடியும். ஒரு வேளை எவரும் இல்லை போலிருக்கிறது.) இருப்பவர் மூலம்தான் அருள் செயல்பட முடியும். அவர்கள் இப்படித்தான் மட்டமாக நினைப்பார்கள். எனவே அருள் மட்டமான எண்ணத்தின் மூலம் செயல்பட அவர்களை மையத்தில் சந்திக்க வைக்கிறது. மட்டமான எண்ணம் வெளிப்பட்டவுடன் மையம் அதை நல்லதாக மாற்றுகிறது. அது பலிக்கிறது.

தம்பி - விநோதமாகவேயிருக்கிறது. உறவில் நல்லவர்களே இல்லையா?

அண்ணன் - விபரம் தெரியவில்லை. பொதுவாகக் கீழ்க்கண்டவை நடப்பது வழக்கம்.

- பையன் மனதில் நல்லவர்களிருக்க மாட்டார்கள். தவறானவர்களே இருப்பார்கள். அவர்களை ஜெயிக்க வேண்டும் என பையன் நினைத்தால் அவர்கள் மட்டுமேயிருப்பார்கள்.
- நல்லவர்களிருந்தால், பையன் தானே அவர்களை விட்டு விலகியிருப்பான்.
- நல்லவர்கள் மூலம் நல்லது நடக்கும்பொழுது, அவர்களை விட்டு விலகுவது எல்லோரும் செய்வது. இவன் விஷயம் தெரியவில்லை.

தம்பி - ஏன் நல்லவர்களை விட்டு விலகுகிறான்?

அண்ணன் - இந்த கேஸை விபரம் தெரியாமல் பேச முடியாது. பொதுவாக உதவி செய்யப்போனால், காரியம் முடிவதற்குள் செய்தவரை அவமானப்படுத்த முயல்வதால், விலகுவார்கள். தான் கெட்டுப் போக வேண்டும் என முயல்பவர்களை வலுவாக நம்புவார்கள். அதுதான் வழக்கம். விபரம் தெரிந்தால் தெளிவாகப் பேசலாம்.

தம்பி - இரண்டு விஷயம் ஆச்சரியமாக இருக்கிறது.

- அவர்(திட்டியவர்) பையன் IASஐ விட்டு வெளியேறியது.
- போஸ்டிங் வந்தது.

அருள் எப்பொழுதும் இப்படித்தான் செயல்படுகிறதா?



அண்ணன் - இப்படி மட்டுமே என அடித்துப் பேசுகிறார் அன்னை. நம்மிடம் விஷயம் வரும்பொழுது ஒரு பகுதிதான் வருவதால், நாம் விளக்க முடிவதில்லை. நம் சொந்த விஷயங்களை மட்டுமே விபரமாக அறியலாம். அதிலும் எதிரியின் பங்கு தெரியாது.

தம்பி - அன்பர்கள் அன்பரல்லாத மற்றவருடன் பழகினால் உடல் சோர்ந்துவிடுகிறது. உடனே தவறு நடக்கிறது. ஆபத்தும் வருகிறது. இது விஷயத்தில் அன்பர்கள் என்ன செய்வது என அறியாமல் தவிக்கிறார்கள்.

அண்ணன் - நாமெல்லாம் ஆரம்பத்தில் அனுபவித்த சிரமம் தானே இது.

தம்பி - நாம் உறவினர்களும், நண்பர்களும் அன்பர் அல்லாதவரானால் விட்டுவிட்டோம். எல்லோராலும் அதைச் செய்ய முடிவதில்லை.

அண்ணன் - அப்படிச் செய்தால் சரி எனப்படும். நாம் செய்தது பெரிய காரியமில்லை. எல்லோரும் அவரவர்கள் சொந்த விஷயத்தில் செய்வதை நாம் அன்னை விஷயத்தில் செய்கிறோம்.

தம்பி - எப்படி?

அண்ணன் - அக்கா மகன் மெடிகல் கல்லூரியில் சேரக்கூடாது என தம்பி கங்கணம் கட்டிக் கொண்டிருந்தால் அந்த அட்மிஷன் விஷயமாக அக்கா தம்பியிடம் எவ்வளவு பேசுவாள்?

தம்பி - ஒரே வீட்டிலிருந்தாலும், தம்பி காதில் படாதபடி விஷயத்தை முடித்துவிடுவாள்.

அண்ணன் - நண்பர்களும், உறவினர்களும் அன்னையை ஏற்கவில்லை. அதனால் நாம் பாதிக்கப்படுகிறோம்

என்று நாம் கூறுகிறோம். உண்மை வேறு. அவர்கள் நாம் முன்னுக்கு வருவதை அன்னை பேரால் எதிர்க்கிறார்கள். உன் அனுபவத்தை யோசித்துப் பார்.

தம்பி - ஆமாம், ஆமாம், அப்படித் தெரிந்தால் யார் எதை எவரிடம் சொல்ல முடியும்?

அண்ணன் - வாழ்க்கையில் நாம் நம் பொருள், அந்தஸ்து, காரியம், நல்லது என்பவற்றைக் காப்பாற்றுவதுபோல் அன்னை மீதுள்ள பக்தியைக் காப்பாற்றினால் போதும்.

தம்பி - இது எளிமையாக இருக்கிறதே. யோசனை செய்தால் விஷயம் இங்குதானிருக்கிறது. பேருக்கு ஆசிரமம், ஸ்ரீ அரவிந்தர், அன்னை.

அண்ணன் - நாம் அன்னையை முக்கியமாகக் கருதவில்லை என்பதே முக்கியம். மெடிகல் காலேஜ் அட்மிஷன் முக்கியமாக இருப்பதைப்போல் நமக்கு அன்னை முக்கியமில்லை. அப்படி முக்கியமாகக் கருதினால், நமக்கு நம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியும்.

தம்பி - நெடுநாளைய சந்தேகம் எளிமையாகத் தீர்ந்துவிட்டது. பெரிய பாரம் இறங்குவதுபோல் தோன்றுகிறது. நீங்கள் சொல்லிய கதையில் முடிவு நல்லதாக இருந்தாலும், பெண் ஓடிப் போனாள் என்பது நன்றாக இல்லையே, அதற்கு ஏதாவது காரணம் உண்டா?

அண்ணன் - காரணமுண்டு. கதையை ஊன்றிப் படித்த பின்னரே விளக்கம் விளங்கும், நான் சுருக்கமாகத் தானே சொன்னேன். சொல்லிப் பார்க்கிறேன். எலிசபெத்திற்கு விக்காம் டார்சி தங்கையோடு ஓட முயன்றது தெரியும். லிடியா பிரைட்டனுக்குப் போகும்பொழுது தாயாரிடமும், தகப்பனாரிடமும் எச்சரிக்கிறாள். ஆனால் தனக்குத்



தெரிந்த இரகஸ்யத்தை மறைத்து எச்சரிக்கிறாள். பெற்றோரிடம் விவரமான பதில் சொல்லியிருந்தால் - விக்காமின் பழைய விஷயத்தைக் கூறியிருந்தால் - லிடியாவை அனுப்பியிருக்கமாட்டார்கள். அசம்பாவிதம் நடந்திருக்காது.

தம்பி - பின் ஏன் அது நடந்தது?

அண்ணன் - அதுவே கதையின் உயர்வைக் குறிக்கிறது.

தம்பி - எப்படி?

அண்ணன் - முக்கியமானவை மூன்று விஷயங்கள். உனக்குப் புரியும்படிச் சொல்லமுடியுமா எனத் தெரியவில்லை.

1. **Strategy** யுக்தி சரியில்லாவிட்டால் பலிக்காது.

2. அழகனைக் குறை கூறப் பெண் மனம் சம்மதிக்காது.

3. லிடியாதான் அதிர்ஷ்டம் கொண்டு வரமுடியும். லிடியாவால் இப்படித்தான் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரமுடியும்.

'நான் எச்சரித்தேன் நீங்கள் ஏற்கவில்லை' என எலிசபெத் சொன்னால், அது சரியாகாது. எச்சரிக்கை பலன் தர மனம் தவறானவனை நாடக் கூடாது. தவறானவன் மீது மனம் இதமாக இருந்தால், அவனால் அவளுக்குத் தீங்கு செய்ய முடியும். விக்காம் மோசமானவன் - சூதாடி, பொய் சொன்னான், துரோகம் செய்தான் - என்று தெரிந்த பின்னும் எலிசபெத் மனம் அவனைக் கண்டிக்கவில்லை. அவனால் தவறு மட்டும்தான் செய்யமுடியும். டார்சிக்கும், லிடியாவுக்கும், எலிசபெத்திற்கும், எவர்க்கும் விக்காமால் தவறு மட்டும்தான் செய்ய முடியும். தவறு செய்பவனை மனம் அன்பாக ஏற்கிறது

எனில் அவன் மீண்டும் தவறு செய்வான். லிடியா திருமணத்திற்குப் பின்னும் எலிசபெத்தால் விக்காமை மனதால் கண்டிக்க முடியவில்லை. அழகான பெண்ணை ஆண் மனம் கண்டிக்காது. அழகனை மனம் போற்றும். தவறு தெரியாது, தெரியவே தெரியாது.

தம்பி - அப்படியானால் தவறு உற்பத்தியானது லிடியாவால் இல்லை, எலிசபெத்தால்தான் என்றாகுமா?

அண்ணன் - அதுவே பெரிய கருத்து.

தம்பி - அகந்தையை அழிக்க அகந்தை மூலமே நாம் முயல்வதால் அது தடையாகிறது என்று பகவான் கூறுவதன் அர்த்தம் என்ன?

அண்ணன் - கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அதைவிட உயர்ந்த கருவியைப் பயன்படுத்த வேண்டும். கோபம் என்பது **vital** உணர்ச்சி. உணர்ச்சியை அதற்கடுத்த உயர்ந்த கருவியான மனத்தால், மனத்தின் அறிவால் கட்டுப்படுத்துகிறோம். அதுபோல் அகந்தையை அழிக்க அடுத்த உயர்ந்ததான ஆத்மாவைப் பயன்படுத்த வேண்டும். உண்மையாக முயல்பவர் "நான் என் அகந்தையைச் சரணம் செய்கிறேன்". என்கிறார். அதுவும் நல்லதே. பலன் மிகக் குறைவாக இருக்கும். நாம் ஓர் சூத்திரத்தை - என் அகந்தை அழியவேண்டும் - பயன்படுத்துகிறோம். சூத்திரம் என்பது சொல். சொல் சிந்தனைக்குரியது. சிந்தனை அகந்தையின் கருவி. அகந்தைக்கடுத்த ஆன்மாவின் கருவி மௌனம். ஆன்மாவால் அகந்தையை அழிக்க மௌனம் கருவியாகும். சிந்தனை - சூத்திரம், சொல் - அகந்தையின் கருவியாவதால், அகந்தையால் அகந்தையை அழிக்க முடியாது. முடியாது என்பதன்று.



அங்கும் **sincerity** உண்மை பூரணமாக இருந்தால் சூத்திரத்தைச் சொல்லும்பொழுது மௌனம் தானே எழும். மௌனம் ஆத்மாவுக்குக் கொண்டு செல்லும். ஆத்மாவுக்கு அகந்தை கட்டுப்படும்.

சரியான முறை என்பது சூத்திரத்தைச் சொல்லாமல், ஆழ்ந்து தியானம் செய்து மனத்தைக் கடந்து ஆத்மாவுக்குப் போய், ஆன்ம விழிப்புப் பெற்று, அகந்தை கரைய நினைத்தால், அகந்தை கரைய ஆரம்பிக்கும், அது பலன் தரும்.

தம்பி - ஒரு விஷயம் எனக்குச் சமீபத்தில் தெளிவாயிற்று. அதற்கு நீங்கள் இக்கதையில் சொன்ன விளக்கம் உதவியாயிற்று. ஆணோ, பெண்ணோ அழகைக் கண்டுவிட்டால் அழகு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அழகு என நினைத்துவிட்டால் அவர்கள் மீது குறை தெரியாது, தெரிவதில்லை. அவர்களால் ஆபத்து வந்தாலும், வேறு காரணம் சொல்வார்களே தவிர, இது கண்ணுக்குத் தெரியாது. தெரியவே தெரியாது.

அண்ணன் - அழகும் அப்படித்தான். பணமும் அப்படியே. பதவியும் அது போலவே. மனம் அழகு, பணம், பதவியை இதமாக நினைப்பதைப்போல் நியாயத்தைக் கருதுவதில்லை, **அன்னைக்கு மனம் அந்த இடத்தைக் கொடுப்பதில்லை.** அன்னைக்கு மனத்தில் அந்த இடம் கொடுப்பவனே பக்தன். அதுபோன்ற பக்தரைக் காண்பது அரிது. நமக்குத் தெரிந்த யாராவது ஒருவர் தேறுவாரா? ஏன், நாம் தேறுவோமா? நாம் பிறரை நினைக்க வேண்டாம். நாம் இவ்விஷயத்தில் தேறினால், நாம் அன்பர்கள் எனக் கூறலாம்.

தம்பி - நாம் தேறிய இடத்திலெல்லாம் காரியம் கூடி வந்துள்ளது. நாமும், பிறர்போல நினைத்தபொழுது காரியம் கெட்டுப் போயிருக்கிறது. காரியம்

கெட்டுப்போன பின்னும் நாம் அவர்களை மனதிலிருந்து எடுக்கவில்லையே. அதனால்தானே சூழல் சரியாக மாறவில்லை. **விஷயம் நூற்றுக்கு நூறு சரியாக வரவேண்டுமானால், நம் மனம் நூற்றுக்கு நூறு அன்னை பக்கமேயிருக்க வேண்டும்.**

அண்ணன் – விஷயம் நமக்குக் கெட்டுப் போகிறது எனில், நாம் வேறெந்தத் தவறும் செய்வதில்லை. உறவு, நட்பு, நியாயம், இதம், இங்கிதம், எப்படிச் சொல்வது நல்லாயில்லையே என நாம் தயங்கித் தயங்கி எதிரியை ஆதரித்ததால் மட்டுமே நமக்குக் கெட்டது, ஆபத்து வந்தது. சட்டம் தெளிவாக இருக்கிறது.

- தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும், மனம் இதமாக அவர்களை நினைக்கக்கூடாது.
- அன்னைக்குத் தவறு செய்பவர்களை நாம் மனதாலும் நினைக்கக் கூடாது. அவர்களைவிட்டுக் காத தூரம் போகவேண்டும்.
- அவர்களால் நடப்பதை மறந்து, அவர்கள் சொல்வதை ஏற்பது அறிவீனம்.
- இந்தத் தவறு மட்டும் செய்யவில்லை எனில் நமக்கும், மற்ற அன்பர்கட்கும், தொந்தரவு என்பதே இல்லை என்பதே நமது நெடுநாளைய அனுபவம்.

தம்பி – பிறருக்கு உதவவேண்டும் என்பதால் மட்டும் வரும் தீங்கல்லவா இது! எலிசபெத் விக்காம் விஷயத்தில் கனிவாக நடப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு பெரிய ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிட்டது. இது புரிய இத்தனை நாளாயிற்று. இனி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அன்னையும் அருளும் நமக்கு அழியா இலக்கியம், அமரத்வம், குபேரச் சம்பத்து, பூலோகச் சுவர்க்கம் தருகின்றார்கள். நாம் நஷ்டம், கஷ்டம், விபத்து, ஆபத்து என்பதிலிருக்கிறோம்.

அண்ணன் – அழியா இலக்கியத்தை ஷேக்ஸ்பியர் எப்படி எழுதினார் என *(***Centenary Vol. No***. 12)* 33ஆம் பக்கத்திலிருந்து 43ஆம் பக்கம்வரை பகவான் எழுதியுள்ளார். ஷேக்ஸ்பியர் எழுத்து சகஸ்ரதளத்தின் கீழேயிருந்து உற்பத்தியாயிற்று. வேதம் சகஸ்ரதளத்திற்கு மேலிருந்து எழுதியது என்கிறார்.

தம்பி – நான் அதைப் படித்திருக்கிறேன். தெளிவாக இருக்கிறது. அதுபோல் மற்றவற்றிற்கு விளக்கம் எழுதவில்லையா?

அண்ணன் – பூலோகச் சுவர்க்கம், காயகல்பம், குபேரச் சம்பத்து, அழியா இலக்கியம் ஆகிய அனைத்திற்கும் சட்டம் ஒன்றே. இவற்றிற்கெல்லாம் விளக்கம் பொதுவாக பயன்படாது. யாராவது செய்தால், கண்ணால் பார்த்தால் புரியும்.

தம்பி – மற்றதெல்லாம் புரியாது, குபேரச் சம்பத்து புரியும்.

அண்ணன் – ‘பணம்’ என்ற கட்டுரையிலும், ‘அதிர்ஷ்டம்’என்பதிலும், பூலோகச் சுவர்க்கத்திலும் இவ்விளக்கமிருக்கிறது.

தம்பி – விளக்கம் தேவையில்லை. உதாரணம் தேவை.

அண்ணன் – உதாரணம் இல்லை என்று கூறுமுடியாது. உதாரணம் ஏற்பட்டால் பொறாமை வருமே தவிர, பின்பற்ற முன்வரமாட்டார்கள்.

தம்பி – அனைவரும் அப்பலனையடைய என்ன செய்யலாம்?

அண்ணன் – அந்த எண்ணம் (பிறர் பலன் பெறவேண்டும் என்ற எண்ணம்) தவறு என உணர்ந்தால், அது பலிக்கும் வாய்ப்புண்டு.

தம்பி – இது எப்படித் தவறாகும்?

அண்ணன் – இது தவறான எண்ணமல்ல. நல்லெண்ணம்தான். நாம் அதை எப்படி ஏற்கிறோம் என்பது நல்லதா, கெட்டதா என்பதை நிர்ணயிக்கும். தம் பெருமை இதன் மூலம் வருவது தவறு. அதுதான் வழக்கமாக வரும். **பலிக்கவில்லை என்றால் மனம் தவறாக இருக்கிறது எனப் பொருள். மனம் சரியாக இருந்தால் அது பலித்திருக்குமே?**

– தொடரும்.

❈ ❈ ❈

## ஸ்ரீ அரவிந்த சுடர்

படபடப்பு சக்தியாவது, தீமை, நல்லதை உயர்ந்த நல்லதாக்குவது, பிரிவினை பேரானந்த இனிமையை மீண்டும் கண்ட ஒற்றுமையால் காண்பது ஆகியவை நம் வாழ்விலும், உணர்விலும் காணும்வரை வெறும் சொற்களாகவே இருக்கும். உள்ளிருந்து ஆன்மா எழுந்து, ஜடத்தை ஆட்சி செய்யும்வரை இதன் உண்மை புரியாது.

*ஜடத்தை ஆன்மா ஆட்சி செய்தால் படபடப்பு சக்தியாகும்.*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## சமூகம் என்ன செய்யும்?

கிராமத்திலிருந்து செய்ய முடியாததை டவுனில் செய்ய முடியும் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. டவுனில், பஸ், போன், கடைத்தெரு, காலேஜ் இருக்கின்றன. கிராமத்தில் அவையில்லை. டவுனில் இன்று நமக்கு நடக்காததை சென்னை, பம்பாயிலுள்ள நம் போன்றவர்கள் செய்கிறார்கள். அவ்வளவு பெரிய ஊருக்குள்ள வசதி அது.

* மாதம் ரூ. 1200/- சம்பாதிக்க ஒரு வேலை கிடைக்கவில்லை என்றவன் தனக்கும் அமெரிக்கா போக வழியுண்டு என்று கண்டு, அந்த வழியைப் பின்பற்றி அங்கு வேலை 'கிடைத்து', பிறகு நமக்கு அது வேண்டாம் என முடிவு செய்து, மறுபடி மனம் மாறி இன்று மாதம் ரூ. 1,60,000 சம்பாதிக்கிறான். பல லட்சம் பேரில் இவனும் ஒருவன்.

* செப்டம்பர் மாதம் 7ஆம் தேதியிட்ட **'Trend Letter'*** என்ற அமெரிக்க பத்திரிகை முதல் பக்கத்தில் கூறுபவை நம்ப முடியாதன. அவற்றுள் ஒன்று 'இந்நூற்றாண்டில் குக்கிராமங்கள் **Web**இல் சர்வதேச வியாபாரம் செய்து அழிந்துபோன காட்டுமிராண்டிகள் உயிர் பெறுவார்கள்' என்று எழுதுகிறது.

**Internet** உலகுக்கு வந்தது 1956லிலும், 1967லிலும், 1969லிலும் சத்தியஜீவியம் உலகுக்கு வந்ததால் அமெரிக்காவுடன் தொடர்பு கொண்டதால் கிடைக்காத **Rs.**1200, கிடைத்த **Rs.**1,60,000 ஆயிற்று என்றால் அன்னையோடு தொடர்பு கொண்டு அதையே பெற்றால் போதும். முன்வருபவர்கட்குண்டு.

* சமூகம் அதிர்ஷ்ட சாகரம் - அன்னை அதிர்ஷ்ட சாகரங்களின் உற்பத்தி ஸ்தானம். ஸ்ரீ அரவிந்தர் "மனிதன் தன் ஆன்மாவைக் கண்டு, பிறருக்கு அவர் ஆன்மாவைக் காண உதவுவதே லட்சியம்" என்கிறார். நான் அதைச் சற்று மாற்றி, "மனிதன் அன்னை மூலம் அதிர்ஷ்டம் பெற்று, பிறருக்கு அவ்வழி காட்டுவது மனிதலட்சியம்" எனக் கூறுகிறேன்.

சமூகம் பெரியதைச் சாதிக்கும், அன்னை அனைத்தையும் சாதிப்பார். பெரிய மனிதன் ஆன்மாவைக் காணலாம். எளிய மனிதன் அதிர்ஷ்டம் பெறலாம். அதிர்ஷ்டம் பெறுவது ஆன்மாவைக் காண்பதற்கு முன்படியாகும்.

* *'டிரெண்ட் லெட்டர்' என்ற பத்திரிகை எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவதில் சமீப காலமாகப் பிரபலமாகிவிட்டது.*

## குணமான கேன்சர்

வெளிநாட்டு அன்பர் தம் மைத்துனருக்கு கான்சர் வந்துள்ளதாகவும், தாம் பிரார்த்தனை செய்யப் பிரியப்படுவதாகவும் மைத்துனர் காணிக்கை கொடுத்துள்ளார், ஆனால் இதெல்லாம் அவர் நம்ப மாட்டார் என்று எழுதியிருந்தார். நம்பிக்கையில்லாதவருக்காகப் பிரார்த்தனை செய்தால் அவருக்குக் குணமாகும், பிரார்த்தனை செய்தவருக்கு நோய் வரும். மைத்துனரே பிரார்த்தனை செய்து குணமானார்.

சில ஆண்டுகட்குப் பின் இந்த அன்பருடைய தாயாருக்கு வயிற்றில் கட்டி இருப்பதாகவும், அது கான்சராக இருக்கலாம் எனச் செய்தி வந்தது. **Test**க்குப் போகும் முன் தாயார் 'இது கான்சராக இருக்கக் கூடாது' என்று பிரார்த்தனை செய்யச் சம்மதிக்கவில்லை. **Test** கான்சர் என வந்தது. மகன் எடுத்துக் கூறியதன் பேரில் கட்டி கரைய தாயார் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தார். கட்டி சுருங்கியது. டாக்டருக்கு ஆச்சரியம். தாயார் 'கட்டி அன்னை சக்தியால் கரைந்தது என டாக்டர் கூறினால்தான் நம்புவேன்' என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார். டாக்டர் கட்டி கரைந்தது எப்படி என எனக்குப் புரியவில்லை. எதுவானால் என்ன? கரைந்தது நல்லது என்றார். மகனும் தாயாரிடம் பலவகையாக எடுத்துச் சொன்னார். கட்டி சிறு அளவிலிருக்கிறது. அதுவும் கரைய வேண்டும். கரையாவிட்டாலும் தொந்தரவில்லாமலிருப்பதால் கரையவேண்டும் என்ற அவசியமில்லை.

'எனக்குப் புரிவது அவசியம். கட்டி கரைந்தது உண்மை. என்னால் டாக்டரை மட்டுமே நம்ப முடியும். அன்னை சக்தி எனக்குப் புரியாது. பிடிக்காதது. புரியாமல் ஒரு விஷயத்தை என்னால் ஏற்க முடியாது' என்றார் தாயார். கட்டி மீண்டும் வளர்ந்தது. தாயார் இறந்துவிட்டார்.

***குணமான கான்சரை, மனம் பிடிவாதமான கேள்விகளை எழுப்பி, மீண்டும் உயிர்ப்பித்தது.***